விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*


பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 10 திங்கட்கிழமை (26.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 281




## திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவுநாள் இன்று நல்லூரில் விசேட நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)



இந்திய இராணுவத்திற்கு எதிராக சாகும் வரையிலான உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம், யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களின் சார்பில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணியுடன் நிகழ்வுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத் தலைமை நாடுகளில் இந்தியாவும் இணைகிறது?

(நோர்வே)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் இணைத்தலைமை நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணையவுள்ளது.

கடந்தவாரம் நியூயோர்க்கில் நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் நடைபெற்ற கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கே.நட்வர்சிங் கலந்து கொண்டார். எனினும் அவர் அழைப்பின்பேரில் கலந்துகொள்ளவில்லையென ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

இணைத் தலைமை நாடுகளின் பட்டியலில் இந்தியாவையும் இணைப்பதற்கு அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் இணங்கியுள்ளதாக கூறப்பட்டது.

இதேவேளை திட்டமிட்டபடியான சந்திப்புக்களை மேற்கொள்ளவேண்டியிருந்ததாகவும், எனினும் அக் கூட்டத்தில் பங்கேற்கும் திட்டம் எதுவும் இந்தியாவிடம் இல்லையென இந்திய வெளியுறவுத்துறை அதிக்காரி ஒருவர் தெரிவித்தார்.

டோக்கியோவில் 2003 ஆம் ஆண்டு ஜீன் மாதம் நடைபெற்ற மாநாட்டிற்கு அமெரிக்கா, ஜப்பான், (12 ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட ஜனாதிபதி முடிவு

## ஏழு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யுமாறு நியூயோர்க்கிலிருந்து ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பிரசாரம்செய்ய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவுசெய்துள்ளார். மகிந்தவுக்கு ஆதரவாக நாடுதழுவிய ரீதியில் ஏழு பொதுக் கூட்டங்களை நடாத்த ஏற்பாடு செய்யுமாறு நியூயோர்க்கில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா கொழும்பிற்குத் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் தனது சகோதரனும் - வெளிவிவகார அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்கவுடன் நடாத்திய நீண்டநேர ஆலோசனையின் பின்பே ஜனாதிபதி இம்முடிபினை எடுத்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## விமானப்படையின் அரண்மீது நேற்றிரவு கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை - கண்டி வீதியிலுள்ள விபுலானந்தா கல்லூரிக்கு முன்பாகவுள்ள விமானப்படையினரின் காவலரண்மீது நேற்றிரவு 9.35 மணியளவில் இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆனால் வீசப்பட்ட கைக்குண்டு வெடிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டு முப்படையினரும் சோதனைகளில் ஈடுபடுகின்றனர். (ச-4)

## தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தும் வகையில் செப். 28 இல் மன்னாரில் எழுச்சிப்பிரகடனம்

(மன்னார்)


தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் பெற்றுத்தரவேண்டும் என்பதை வலியுறுத்தியும், வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தியும் மன்னாரில் எதிர்வரும் 28 ஆம் திகதி தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனம் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதற்கான ஏற்பாட்டை மாவட்ட செயலணிக்குழு செய்துள்ளது. மாவட்டக் குழுத் தலைவர் தாஸ் தலைமையில் மன்னார் பொது அரங்கில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

நீடித்துக்கொண்டிருக்கும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதில் அரசாங்கம் தொடர்ந்தும் இழுபறிநிலையையே கடைப்பிடித்துவருகிறது.

சர்வதேச சமூகம் இது விடயத்தில் தலையிட்டு தமிழ்மக்களுக்கான சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தரவேண்டும் என்பதை தமிழ்மக்கள் ஏகோபித்து ஒற்றுமையுடன் குரல்கொடுத்து சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் மன்னார் மாவட்டத்தில் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு நடைபெறவுள்ளது. (ச)

## கனடாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாண சகோதரர்கள் இருவர் பலி!





(ரொரன்ரோ)

கனடா ஒன்ராரியோ மாநிலத்திலுள்ள வோட்டர்லூ எனும் இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சகோதரர் இருவர் பலியாகினர்.

ரொரன்ரோவைச் சேர்ந்த சகோதரர்களாகிய நகுலசிகாமணி சௌமியன் (வயது 19), நகுலசிகாமணி சந்திரசேகரன் (வயது 21) ஆகிய இருவருமே பலியாகினர்.

இவர்களுடன் சென்ற வோட்டலூவாவைச் சேர்ந்த மற்றுமொருவர் படுகாயமடைந்தார். இவர்களை மோதிவிட்டுத் தப்பிச்சென்ற வாகனத்தைத் தேடிவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச,த,4,9)




EXPOAIR
your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாணவர்கள், விவசாயிகள் உட்பட பலருக்கும் பயனாக அமைந்த விவசாயக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி விரிவாக்கப்பகுதிகள் இணைந்து நடாத்தும் விவசாயக் கண்காட்சி ஒன்று கடந்த 21,22, 23ஆம் திகதிகளில் திருநெல்வேலி விவசாய திணைக்களத்தில் நடைபெற்றது.

விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா தலைமையில் விவசாய ஆராய்ச்சிப் பொறுப்பு அதிகாரி திருமதி எஸ்.விஜயரட்ணத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இக் கண்காட்சியில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கண்காட்சியை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

கண்காட்சியில் பலவித விவசாய நடவடிக்கைகள், கொள்கலன்கள், நாற்று உற்பத்தி, நாற்று மேடை உற்பத்தி, மூவகைத் தோட்டம், நீர்ப்பாசன முகாமைத்துவத்துக்கான தூவல் நீர்ப்பாசனம், துளி நீர்ப்பாசனம் என்பன உடபட புதிய தொழில்நுட்பங்களை வெளிக்காட்டும் வயல்முறைச் செயற்பாடுகளும் பாதுகாக்கப்பட்ட விவசாய செயன்முறைகளின் கீழ் மரக்கறிப் பயிர்களின் உற்பத்தி, யாழ்.உலர் வலய மண்வகைகளும் அவற்றில் வளர்க்கக்கூடிய பயிர்வகைகளும் நச்சுத் தன்மையற்ற பூச்சி நாசினிகளும் அவற்றின் உற்பத்தி முறைகளும் ஆகியன விவசாய விரிவாக்கப்பகுதியினரால் காட்சிப் படுத்தப்பட்டன.

விவசாய ஆராய்ச்சி நிலையத்தினரால் வாழைக்குருமன், மிளகாய், இலைச் சுருட்டல், கத்தரிக்காய் தண்டு துளைப்பான், கத்தரிச் சிற்றிலை போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட தாரங்களின் மாதிரிப் பகுதிகள், கோழி எருவின் பயன்பாடு, பாகல் கொடிக்கான பந்தல் அமைப்பு முறைகள் வெங்காயம், மிளகாய், கத்தரி போன்றவற்றின் புதிய இனங்களும் உப்புநீரால் பாதிக்கப்பட்ட மண்ணின் அமில உப்புத்தன்மைகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு சிறந்த முறையில் விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

21,22,23 ஆம் திகதிகளில் 3 நாட்களாக காலை 9.00மணியிலிருந்து 5.00மணிவரை இடம்பெற்ற இக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ர-36)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த மூன்றரை கிலோ ஹெரோயின் மீட்பு

## இலங்கை பெண்மணி உட்பட இருவர் இராமநாதபுரத்தில் கைது

(இராமநாதபுரம்)

இலங்கைக்கு கடத்துவதற்காக இராமநாதபுரம் அருகே பதுககிவைக்கப்பட்டிருந்த மூன்றரை கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின போதைப் பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இலஙகைக்குக கடத்துவதற்காக போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து சென்னையில் உள்ள இந்த பிரிவு அதிகாரிகள் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

இதில், திருப்புல்லாணி வடக்கு புதுத்தெருவைச் சேர்ந்த காளிதாஸ், இலங்கைப் பெண்மணி மகாதேவி என்ற ரமா ஆகியோர் முத்துப்பேட்டை அருகே கடற்கரைப் பகுதியில் மூன்றரை கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப பொருளை பதுக்கி வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அவர்கள் இருவரையும் கைதுசெய்த பொலிஸார் இதில் மேலும் யாருக்காவது தொடர்பு இருக்கிறதா? என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். மீட்கப்பட்ட போதைப பொருளின் மதிப்பு சுமார் மூன்றரைக் கோடி ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## வடமராட்சியில்

# சட்டவிரோத மணல் அகழ்வால் கடல்நீர் உட்புகும் அபாயம்!

(துன்னாலை)

வடமராட்சி துன்னாலை செட்டியகாடு வல்லிபுரம், குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளில் இரவு பகலாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வால் கடல்நீர் குடிமனைக்குள் புகும் அபாய நிலை தற்போது தோன்றியுள்ளது.

மேற்படி மணல் அகழ்வை தடுத்துநிறுத்த சுற்றுச் சூழலில் அக்கறையுள்ள சமூக நிறுவனங்கள் முன்வரவேண்டும் இல்லையேல், இன்னும் சில மாதங்களில் தரைச்சமநிலை சீரற்றுவிடும் என அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் மேற்படி மணல் அகழ்வில் ஈடுபடும் நபர்களை கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டு வந்த விடுதலைப்புலிகளும், சூழலவளம் பேணுவோரும் குடா நாட்டைவிட்டு வெளியேறியமையும், அண்மையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் வெளிக்கள வேலைகளில ஈடுபடத் தயங்குவதுமே இச் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோருக்கு வாய்ப்பாகியுள்ளது.

இருப்பினும் பிரதேச நலனில் அக்கறை கொண்டு சட்ட நீதித்துறையினர் இது தொடர்பில் உடன நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவ்வப்பகுதி மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற)


## சிறு விளம்பரம்

### யுனிவெக்

2005A/L பரீட்சையில் சித்தியடைந்த 300 District Rank இற்கு உட்பட்ட வலிகாம பிரதேச மாணவர்கள் 29.09.2005ம் திகதிக்கு முன்னர் சங்கானை இலங்கை வங்கி அருகில் உள்ள யுனிவெக் கணனிப் பயிற்சிக் கல்லூரியில் 2000/= பெறுமதியான பரிசிலிற்கான காசோலையினைப் பெற்றுக்கொள்ளவும். ஏனைய பிரதேச மாணவர்களிற்கு பின்னர் அறிவிக்கப் படும். T.P.077-6176476 (9912)

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக் ரோணி பிளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடக்கமாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல போன்றவை விஷேசமாக செய்யபபடும் ரகு போட்டோ டெக்னிக் 301- கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் மேல் மாடி தொடர்பு சு.நாராயணசாமி. (9916)


## சிறுவர் தின ஏற்பாடுகள்

ஊடகத்தகவல் துறை அமைச்சு உலக சிறுவர் தினத்தை விமர்சயாகக் கொண்டாட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான பணிப்புரையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கியுள்ளார். இந்த நிகழ்வு இம் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 3ஆம் திகதிவரை பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் சிறுவர்கள் இந்தக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வார்கள்.

அரசாங்க ஊடகம் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# இராசி பலன்

**26.09.2005**
(புரட்டாதி 10, திங்கட்கிழமை)
நவமி பின்னிரவு 5.51 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 02.51 மணிவரை
சித்தாமிர்தம்
இராகுகாலம் 07.32-09.02 மணிவரை
சுபநேரம் 09.02-10.32 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | போசனசுகம், பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு, காரியசித்தி. |
| இடபம் | வேலைச்சுமை, உணர்ச்சிவசப்படுதல், வீண்செலவு, காரிய தாமதம். |
| மிதுனம் | கற்பனை மிகுதி, நல்லமுயற்சி, புதிய தகவல், பெரியோர் உதவி. |
| கடகம் | உடல்நலக்குறைவு, அமைதிக்குறைவு, காரிய தாமதம், கோபப்படுதல். |
| சிங்கம் | சிந்தனைமிகுதி, கீர்த்தி, கலந்துரையாடல், முயற்சி கைகூடும். |
| கன்னி | மேன்மை, சுபசெய்தி, உற்சாகம், முயற்சி கைகூடும். |
| துலாம் | புதியதிட்டமிடல், அதிகாரிகள் ஒத்துழைப்பு, நிர்ப்பந்த நிலை, காரிய தாமதம். |
| விருச்சிகம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடாங்கல், நிலைமாற்றம், கலகம். |
| தனுசு | அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, புதிய சிந்தை, பெருமையடைதல். |
| மகரம் | ஆரோக்கியம், தொழில்நன்மை, கல்வியில் ஆர்வம், முயற்சி பலிதம். |
| கும்பம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, உடல் நலக்குறைவு, பொருள் விரயம். |
| மீனம் | கல்வியில் ஆர்வம், காரிய தாமதம், தாய்வழி உறவு, திடீர் நன்மை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# தச்சந்தோப்பு பொது நூலகத்தில் கவனிப்பாரற்ற நிலையில் நூல்கள்

## வாசகர்கள் கவலை

(பொன்னாலை)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் தச்சந்தோப்புப் பொதுசன நூலகத்தில் பெருமளவு நூல்கள் நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் உள்ளதாக வாகசர்கள் கவலை தெரிவித்துள்ளனர் வாசகர்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்நூல்களை மறுசீரமைப்புச் செய்யுமாறு பலதடவை பிரதேசசபைச் செயலாளரிடம் கேட்டுக்கொண்டபோதும் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் பெறுமதிமிக்க பல நூல்கள் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்பட்டது. (ச-49)

# ஜனாதிபதித் தேர்தல் தபால்மூல வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குரிய யாழ். தேர்தல் மாவட்டத்திற்கான வாக்காளர் அட்டைகள் யாழ்.செயலகத்தின் தேர்தல் திணைக்களத்தால் துரிதகதியில் நிரப்பப்பட்டுவருகின்றன. இது தொடர்பாக யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளருடன் தொடர்பு .கொண்டு கேட்டபோது,

தபால் மூல விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி இம்மாதம் 28ஆம் திகதி என்றும் அவ் விண்ணப்பங்கள் 2004ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் விபரங்களையே கொண்டிருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தபால் மூல விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக ஒவ்வொரு திணைக்களங்களாலும் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அத்தாட்சிப் படுத்தும் திணைக்களத் தலைவர் தனது விண்ணப்பத்தை தானே உறுதிசெய்ய வேண்டுமென்று தெரிவித்தார்.

பாடசாலை ஆசிரியர்களின் விண்ணபங்களை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் அல்லது கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் அல்லது கோட்டக்கல்வி அலுவலக பதவிநிலை அதிகாரி ஆகியோரே அத்தாட்சிப்படுத்தும் அதிகாரிகளாக கடமையாற்றுவார்கள். அவர்களூடாக உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் பொதுவாக கடைப்பிடிக்கப்படுவதில்லை. எனவேதான் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. இனிவரும் காலங்களில் இந்நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (து-36)

# தியாகி லெப் கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு தினம்



## மக்களே! புரட்சியாக வெடித்த நாள்

பசி வந்தால் பத்தும் ப்றக்கும்
பூமியில் வாழும் உயிர்களுக்குத்தானே பசிக்கும்-பசிக்குமா?
பசிக்கும் பசித்த வரலாறு உண்டு
பசிக்கே பசித்ததா! ஆம் அது ஈழத்தில் நடந்தது
திலீபா! பசிக்கே பசித்தபடியால்தான்
உன் உடலைப் புசித்தும் குருதியைக் குடித்தும்
தன் தாகத்தை தீர்த்தது-அது தான்
பசிக்கே பசித்த நாள்
பசி உன்னிடம் மட்டுமே தோற்ற நாள் செப்டெம்பர் 26
அந்த நாள்! இந் நாள்!
அணையப்போகும் விளக்குத்தான் பிரகாசமாக எரியும்
எண்ணை இழந்தெரியும் ஓர் திரியாய் உன்னை உருக்கி எரிந்தாய்
எம் விடிவிற்காய்...

சுடர் ஒளி கொடுக்கும், இருளையும் அகற்றும்
சுடராய் ஒளிகொடுத்தாய் எம் வாழ்வுக்காய்
அன்று நீ கண்ட கனவு இன்று பலித்தது
மக்களே புரட்சியாக வெடித்த அந்த நாளை
இன்று வந்து பார் திலீபா!
உன் முயற்சியால் புரட்சி வெடித்தது
புரட்சியால் எழுச்சி கிடைத்தது
எழுச்சியால் ஈழம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்
தலைவன் வழி நடக்கிறோம்
உங்கள் கனவுகளை சுமந்தபடி

யூட்நிமலன்


## ஈழத்து தியாகி திலீபன்

எழுச்சியின் திறவு கோலாய் எழுந்த தியாகி
எண்ணத்தின் நாற்றாங்காலாய் எழுந்த தியாகி
விழிப்புறும் தமிழர் தாயகம்கான எழுந்த தியாகி
விடுதலை வேண்டி வேள்வி தொடங்கிய தியாகி
அழியாமல் தமிழர் வரலாற்றை காக்க எழுந்த தியாகி
அன்னைமண் விடிவுபெற உழைத்த தியாகி
வழிகாட்டி தமிழர்வாழ உயிர்தந்த தியாகி
வரலாறு என்றும் வணங்கும் ஈழத்து தியாகி

மதுரகவி

# பாரதத்திற்கு பாடம் புகட்டிய

"திலீன்! தமிழீழ மக்களின் உயிரோடுகலந்து விட்ட பெயர். தன்னுடைய ஆத்ம பலத்தால் தமிழீழ டக்களையெல்லாம் ஒன்றாகக் கூட்டியவன். அறவழிப் போராட்டத்தின் உச்சத்தைத் தொட்



உண்ணா விரத மேடையில் ஏறும் முன் தியாகி லெப் கேணல் திலீபனுடன் தமிழ் அன்னை.

டுக்காட்டியவன்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இவன் செய்துள்ள தியாகம் அளப்பெரியது எந்த கல் நெஞ்சுக்காரரையும் உருக்கக் கூடியது. இருந்தும் திலீபன் தமிழீழ மண்ணை விட்டுச்சென்றுவிட்டாள்.

நல்லூரின் வீதியிலே குருமனல் கண்ணீரில் நனைந்து விட்ட அந்த சோக காவியம் தமிழீழ மக்கள் முன்பாக பாடி முடிந்தது. அவன் நேசித்த மக்களையும் மண்ணையும் விட்டுப் பிரிந்து 18 ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன என்று" "ஈழத்தின் இமயம்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள வெளியீடு உள்ளமுருக திலீபனின் தியாக வரலாற்றினை எடுத்துரைக்கிறது.

விட்டு உயிர் துறந்தார். இக் குழந்தையை இவரின் பாட்டியும் சிற்றன்னை இராசலட்சுமியும் வளர்தெடுக்கும் பேறு பெற்றனர். இவரின தொடக்க நிலைப்படிப்பு உரும பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் அமைந்தது.

இவருக்கு 10 வயதாக இருக்கையில் 1974இல் நடைபெற்ற 4வது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் நடைபெற்ற துன்பம் தோய்ந்த நிகழ்ச்சிகள் இவர் நெஞ்சில் ஆழமாகப் பதிந்திருந்தன. 1977ல் ஏற்பட்ட இனப்படுகொலையும் இவர் நெஞ்சில் ஆழப் பதிந்த நிகழ்ச்சி. இவருக்கு அப்பொழுது வயது 13.

### பிரபாகரனின் பிரியமான பிள்ளை

எம் தேசியத் தலைவன் மேதகு வேலுப் பிளளை பிரபாகரனுடன் எப்படியும் இணைய வேண்டும். அவர் இதயத்தில் இடம்பெற வேண்டும் என்ற துடிப்போடு வாழ்ந்த திலீபன் 1983இல் தமிழீழ



உருகும் திலீபனுக்காய் உருகும் அன்னை.

15.09.87ல் காலை 8மணிவரையில் தமிழீழ போராட்ட வரலாற்றில் வைரத்தூரிகை கொண்ட பொன் எழுத்துககளால் பொறிக்கப்பட்ட வேண்டிய நாள். தமிழீழ விடுதலைப புலி களின் யாழ். மாவட்ட அரசியல பிரிவுப் பொறுப்பாளர் ஆகிய திலபன (இராசையா பார்த்தீபன்) நல்லூர் வடக்கு வீதியிலுள்ள கந்தன் கருணை இல்லத்தில் நடமாடும் தொலைபேசியுடன் நடுத்திண்ணையில் அமர்ந்துகொண்டு புன்னகை தவழும முகத்துடன் நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருக்கிறார். இவருக்கு அருகில் கவிஞன் காசியானந்தன் உட்பட சில போராளிகளும் அமர்ந்திருக்கின்றனர். கிட்டு அண்ணாவினால் உருவாக்கப் பட்ட இவரிடம் கிட்டு விடம் காணப்பட்ட அனைதது சிறப்பியல் புகளும் குடிகொண்டிருந்தன.

### ஊரெழு தந்த தமிழின் உயிர்மூச்சு

யாழ்.மாவட்டத்திலுள்ள பனை மரங்கள் கொஞ்சிக் குலாவும் ஊரெழு எனும் ஊரில் இராசையா தம்பதிகளுக்குக் கடைக்குட்டியாக பிறந்தவன். பத்துமாதம் வயிற்றில் வைத்து பரிந்து காத்த தாய் 10 மாதம் முடிவுற திலீபனை

விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் அங்கத்தவராக சேர்ந்தார். தொடக்கத்தில் கப்ரின் பண்டிதருடன் சேர்ந்து இயக்கப் பரப்புரை ஆற்றினார். பின்பு மானிப்பாய் வட்டுக் கோட்டை போன்ற பகுதிகளில் பரப்புரை ஆற்றும் பொறுப்பினை ஏற்றார். 1983ஆம் ஆண்டு நெருக்கடி மிகுந்த காலம். எந்த உயிருக்கும் ஆபத்து ஏற்படத் தக்ககாலம். ஆனால் இவர் எதனையும் பொருட்படுத்தாது எதிர்நீச்சல் போடடார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்டத் தளபதியாக விளங்கிய கிட்டு அண் ணன் திலீபனின் செயற்றிறனை உற்றுக் கவனித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவடட அரசியல் பொறுப்பாள ராக திலீபனை நியமிக்கும்படி தலைவர் பிரபாகரனிடம் விதந்துரைத்தார்.

இவ்விதந்துரைப்பின் விளைவு தமிழீழ விடுதலைப்புலிகள் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

திலீபன் வெல்லும் சொல்திறன் படைத்தவன். அவர் தன் சொல்லை மிஞ்சுகின்ற அளவிற்கு செயலில் ஈபட்டவர். தன் உயிரைத் துச்சமென மதித்து போராடிய வேளை

யில் பலமுறை சிங்கள இராணுவத்தினரிடம் பிடிபட்டுத் தப்பிய வரலாறு உண்டு. வல்லையில் ஏற்பட்ட விடுதலைப் புலிகள் -இராணுவ மோதலில் வயிற்றில் குண்டு பாய்ந்து அறுவை வைத்தியத்திற்கு ஆளானார். அப்பொழுது அவர் குடலில் இருந்து 14 அங்குல நீளத்துண்டு எடுத்து வீசப்பட்டது. இதனையும் எதையும் தாங்கும் இதயத்துடன் ஏற்றுக்கொண்டார்.

# மறவன் தியாகி திலீபன்

களத்தில நின்ற அவர் "களத் தில்" என்ற திங்கள் இதழையும் நடாத்தி தன் எண் ணங்களை ஏறறமுற எடுத்துரைத்தார். அவர் கட்டுரைகளில் எளிமையும் மொழித தூய்



மையும துலங்கியது. இவரின் எழுதது வீச்சு செயல்வடிவம் பெற்ற பொழுது பின்வரும் உயிரூட்டும் இயக்கங்கள் உருவாகின. அவையாவன,

*தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கம்
*தமிழீழ மகளிர் அமைப்பு
*சுதந்திர பறவைகள் அமைப்பு
*தமிழீழ தேசபக்தர் அமைப்பு
*தமிழீழ விழிப்புக் குழுக்கள்
*தமிழீழ கிராமிய நீதிமன்றங்கள்

என பலபட விரிந்தன.

திலீபனின் உண்ணா நோன்பு 15.09.87இல் காலை 9.55மணியளவில தொடங்கியது. இவர் உண்ணா நோன்பு பின்வரும் 5 கோரிக்கைகள் அடிப்படையில் தொடங்கியது.

1. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக்காவலில் சிறைகளிலுள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

2. மறுவாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3. இடைக்கால அரசு நிறுவப் படும் வரை மறுவாழ்வு என்று அழைக்கப்படும் எல்லாவேலைக ளும் நிறுத்தப்பட வேண்டும்.

4. வடகிழக்கு மாகாணங்களில் காவல் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கபடுவோாக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள். பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இராணுவ காவல் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

மேறகுறித்த 5 கோரிக்கைகளும் பிரசாத் அவர்களால் முன் மொழியப்பட்டு 13.09.87இல் இந்தியத் தூதுவரின் கையில் நேரடியாக கிடைக்கக்கூடியதாக 24 மணிநேர காலக் கெடு கொடுத்து அனுப்பப் பட்டது. ஆனால் 15.09.87வரை பதிலேதும் கிடைக்காத நிலையில் திலீபனின் உண்ணா நோன்பு தொடங்கியது. திலீபனுக்கு புத்த



அரசியல் உரையின் போது தியாகி லெப் கேணல் திலீபன்.

கங்கள் என்றால் பைத்தியம். அன்று அவன சுவைத்துப் படித்த கவிதை "பாலஸ்தீனக் கவிதைகள" இழந்த நாட்டினை மீட்க பாலஸ் தீனம் போராடுகிறது. இருக்கின்ற நாட்



யாழ் கோட்டைக் காவலரன் பகுதியில் கேணல் கிட்டு மற்றும் போராளிகளுடன் தியாகி லெப் கேணல் திலீபன்.

டினை இழக்காதிருக்க ஈழத் தமிழர் போராடுகின்றனர். கூர்த்த மதி



படைத்த திலீபன் இவற்றையெல்லாம் ஒப்புநோக்கி சிந்தித்திருப்பார் என்று நாம் ஊகிக்கலாம். வெறுமனே உணர்ச்சி வயப்பட்டு அவர் இயக்கத்திற்கு வந்தவரல்ல மாறாக அவர் ஒரு மருத்துவ மாணவா என்பதை நாம் மறவாது இருப்போமாக.

15.09.87இல் முன்பு குறிப்பிட்ட 5 கோரிக்கைகளை வைத்து உண்ணா நோன்பை மேற்கொண்ட காந்தியைத் தந்த பாரதத்தாய் மறுத்ததன் விளைவு காந்தியடிகளை மிஞ்சுகின்ற அளவிற்கு தியாகம் செய்த தலீபனின் வாழ்வு 2ஆம் நாளில் தனது 23ஆம் அகவையில் முடிவுறுகிறது.

ஈழத்தமிழர். மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகமே கதறியழ திலீபனின் உயிர்மீளா உலகம் செல்கிறது. சோகத்தில் பிறந்தது சுலோகம் ஏன்பர். எல்லை மீறிய துன்ப உணர்வு இனிய கவிதைகளை தோற்றுவிக்குமென்பர் திறனாய்வாளர் உள்ளத்துள்ளது கவிதை. இன்ப முருவெடுப்பது கவிதையென்பார் நம் கவிமணி அவர்கள். கருத்துடன் ஒரு சிறிய மாறுபட்டு இன்ப உணர்வு மட்டுமல்ல துன்ப உணர்வும் கவிதையைத் தோற்றுவிக்கும் என்பதற்கமைய திலீபன் மறைந்த போது. தோன்ற இருக்கும் தமிழீழத்தின் அரசவைக் கவிஞர் காசி ஆனந்தன் தன்னை மறந்த நிலையில்

"திலபன் அழைப்பது சாவையா? இந்தச்
சின்ன வயதில் இது தேவையா?..

என்று பாடிய போது காலங்காத கண்கள் எவையுமிருக்கவில்லை.

திலீபன் மறைந்து 18ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆண்டுகள் பல உருண்டோடிய நிலையிலும் அவன் நினைவுகள் எம் நெஞ்சோடு இரண்டறக் கலந்து விடடன. "செத்தும் வாழ்பவர் சிலர், வாழும்போதே செத்தவர்கள்பலர்" என்று அன்று அண்ணா கூறிய கூற்று திலீபனைப் பொறுத்த வரையில் முழுதும் உண்மையாகும். செத்தும் வாழும் சிலரில் திலீபனிற்கு தனியிடம் உண்டு நாம் ஏற்கும் வரலாறு தருகினற தீர்ப்பும் இதுவே யாகும்.

மா.க.ஈழவேந்தன்
பாராளுமன்ற உறுப்பினர்
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

# அனுசரணைப் பணி தொடரும் நோர்வே அரசாங்கம் அறிவிப்பு

(நோர்வே)

நோர்வேயில் தொழிற்கட்சி ஆட்சியில் பொறுப்பேற்றுள்ள போதிலும் இலங்கை சமாதான நடவடிக்கைகளில் அனுசரணையாளர் பணி வழமைபோல் தொடரும் என நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கையில் முக்கிய பங்காற்றும் எரிக் சொல்ஹெய்ம் நோர்வேத் தலைவர் ஒஸ்லோவில் நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் சமாதான நடவடிக்கைகளில் எந்த விதமான மாற்றமும் இல்லை எனக் குறிப்பிட்ட இலங்கைக்கான நோர்வேத் தூதுவராலயத்தின் பேச்சாளர் ஹெஸ்ட் ஸ்ருவால்ஸிடர் வழமையான முறையில் சமாதான முன்னெடுப்பினைத் தொடர விருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, யுத்த நிறுத்த உடன்படிக்கையினை மீளாய்வு செய்வது சம்பந்தமான பேச்சுவார்த்தையை நடாத்துவது குறித்து ஆராய்வதற்காக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் டொன் புறூவ் ஹொவ்டே அடுத்த மாதம் ஆரம்பத்தில் இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வரும் அவர் எதிர்வரும் 5ஆம் திகதி கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் அனுசரணையாளராகப் பணியாற்றுமாறு நோர்வே தொழிற்கட்சித் தலைவர் ஸ்டோல்டன் போர்க்கிற்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில்

# பதில் தாக்குதல் நடத்துவதை தவிர்க்குமாறு உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பொது மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் போது அதற்குப் பதில் தாக்குதலினை நடாத்துவதைத் தவிர்க்குமாறு இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஆனால் வனப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தப்படுமானால் அதற்குப் பதில் தாக்குதலினை நடாத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வெலிக்கந்தை,மின்னேரியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்த இராணுவத்தினருடன் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கான அனைத்து வசதிகளும் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் 'செய்துகொடுக்கப்படும். ஆயுதங்கள் உட்பட இராணுவத்தினருக்கான உபகரணங்கள் அனைத்தும் உரிய முறையில் பெற்றுக் கொடுக்கப்படும்.

தேர்தலின் போது அஞ்சல் வாக்குகள் செலுத்தப்படும்போது முறைகேடுகள் இடம்பெறும் வாய்ப்புக்கள் உள்ளன.

இதற்கு ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (ந-4)

# மீண்டும் மக்களை ஏமாற்றவே ஜே.வி.பி - மஹிந்த ஒப்பந்தம்

## சுட்டிக்காட்டுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஜே.வி.பி மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் நோக்கம் மீண்டும் மக்களை ஏமாற்றுவதே என ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் றோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பும் இவ்வாறான உடன்படிக்கை ஒன்றின் மூலமே மேற்கொள்ளப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்குள் சம்பள உயர்வு மற்றும் தொழில்வாய்ப்புக்கள் என்பனவற்றை வழங்குவதாக கூட்டமைப்பு அரசாங்கம் தெரிவித்தது. பொருட்களின் விலையினைக் குறைப்பதாகக் கூட்டமைப்பு அரசு தெரிவித்தது. உலக வங்கியின் செயற்பாட்டினைக் குழப்பப் போவதாகவும் தெரிவித்தது.

கூட்டமைப்பு கூறியதில் எதனையாவது நிறைவேற்றியதா,

இன்று வரை நிறைவேற்றவில்லை. ஒரு வாக்குறுதியேனும் நிறைவேற்ற முடியாமல் இன்றுவரை கூட்டமைப்பு அரசாங்கம் திண்டாடுகின்றது. எனினும் தேர்தலுக்காக பிரதமர் மஹிந்த ஜே.வி.பியுடன் இணைந்து மீண்டும் கூட்டமைப்பினை உருவாக்கியுள்ளார்.

12 நிபந்தனைகளுடன் உடன்படிக்கை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த 12 நிபந்தனைகளில் ஒன்று கூட நாம் கூறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுத்திட்டங்களாக இல்லை.

பெண்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை வரை எதற்கும் தீர்வில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ந-4)





நெதர்லாந்து தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட " நினைவெழுச்சி நாள்-2005" நிகழ்ச்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை நெதர்லாந்தின் அல்க்மார் எனும் இடத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. முதற் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதி, கேணல் சங்கர், கேணல் ராஜு",லெப்.திலீபன், லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன், லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரனுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 10 வேங்கைகளின் நினைவாக இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வுக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

## தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து படகு மூலம் தலை மன்னாரை வந்தடைந்த அகதிகள் 4 பேர் நேற்று முன்தினம் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை கிராமசேவை அதிகாரிகளூடாக சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதவான் உத்தரவிட்டார். (த-7)


## மின்னல் தாக்கி இருவர் உயிரிழப்பு


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பருத்திச்சேனைப் பகுதியில் மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சீனித்தம்பி சசிகரன் (வயது-25 )அவரின் மைத்துனரான குணசேகரம் ஜெயந்தன் ஆகியோரே மரணமடைந்தவர்களாவர். (ந-4)

# கத்ரீனாவால் உயிரிழந்தோருக்கான அஞ்சலி நிகழ்வு திருகோணமலையில்








(திருகோணமலை)

அமெரிக்காவில் ஏற்பட்ட கத்ரீனா சூறாவளியால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருகோணமலை வாழ் மூவினத்தைச் சார்ந்த சிறுவர்களால் அஞ்சலி நிகழ்ச்சியும் அனுதாபக் கூட்டமும் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை 10மணி தொடக்கம் 11.30மணி வரை நடாத்தப்பட்டது.

மெழுகுதிரிகள் ஏந்திய வண்ணம் உயிரிழந்தவர்களிற்கு வணக்கம் செலுத்திய திருமலைச் சிறார்களின் புதாதைகள் மற்றும் ஆறுதல் தெரிவிக்கும் கையெழுத்துப் பிரதிகள் பன்னாட்டு புலம் பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் பணிப்பாளரும் அமெரிக்காவைச் சேர்ந்தவருமான எலிசபத்திடம் அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்வதற்காகக் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

# ஆசிரியர் சேவை பதவியுயர்வு வழங்கும் அதிகாரம் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு!

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சேவைக்கான பதவி உயர்வுகளை வழங்கும் அதிகாரத்தை வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.


இலங்கை ஆசிரியர் சேவை பதவி உயர்வு தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட கல்வியமைச்சின் 2005/ 01ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கமைய ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதில் மாகாணக்கல்வி நிர்வாக அதிகாரிகளால் காட்டப்படும் தாமதம் குறித்து ஆசிரியர் சங்கங்கள் கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்தே இம் முடிவினை கல்வியமைச்சு எடுத்துள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எஸ். குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவைக்கான பதவி உயர்வு தொடர்பான தற்காலிக கடிதங்களை ஆசிரியர்களுக்கு வழங்கி சம்பளப்படி நிலைகளை வழங்கிய பின் முறையான கடிதங்களை வழங்குவதற்குத் தேவையான ஆவணங்களை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கும் அதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றுநிருபம் இவ்வாரம் வெளியிடப்படும்என மேலதிக செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந-4)

# விஸ்வரூபம் எடுக்கிறது கங்குலி-சப்பல் மோதல்

## சப்பலின் கொடும்பாவி எரிப்பு



கங்குலியின் ஆதரவாளர்கள் கொல்கத்தாவில் சப்பல் கொடும்பாவியை எரித்தார்கள்.

இந்திய கிரிக்கெட் அணி கப்டன் கங்குலக்கும், பயிற்சியாளர் கிரேக் சப்பலுக்கும் இடையே மோதல் உருவாகி உள்ளது. இதை தொடர்ந்து கங்குலியை குற்றம் சாட்டி இந்திய கிரிக்கெட் சபைக்கு சப்பல் 6 பக்க புகார் கடிதம் அனுப்பினார்.

அதில், கங்குலி கப்டன் பதவிக்கு அருகதை அற்றவர் எனவும் அவர் உடல் நிலையாலும், மனநிலையாலும் தகுதி இழந்தவர். இந்திய அணியில் பிளவை ஏற்படுத்துகிறார். நெருக்கடியான நேரத்தில் காயம் ஏற்பட்டு விட்டதாக நடிக்கிறார் என்று சரமாரியாக சப்பல் புகார்களை கூறியிருந்தார்.

இதனால் கங்குலி- சப்பல் விவகாரம் மேலும் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது. கொல்கத்தாவில் உள்ள கங்குலியின் ரசிகர்கள் அவ்வப்போது போராட்டம் நடத்துவது வழக்கம்.


கங்குலிக்கு சமீபத்தில் தடை விதிக்கப்பட்டிருந்த போது, அவரை அணியில் சேர்க்கும்படி வற்புறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

அதைப்போல இப்போது சப்பலுடன் கங்குலிக்கு மோதல் ஏற்பட்டிருக்கும் இந்தப் பிரச்சினையிலும் கங்குலிக்கு ஆதரவாக அவரது ரசிகர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கொல்கத்தாவில் இந்திய கிரிக்கெட் சபை வருடாந்த பொதுக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் நடைபெற்ற ஐந்து நட்சத்திர விடுதி முன்பாக கங்குலியின் ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டார்கள். கங்குலிக்கு ஆதரவாகவும், சப்பலுக்கு எதிராகவும் கோஷங்களை முழங்கினார்கள். 'கங்குலி வாழ்க! சப்பல் ஒழிக! சப்பலை நீங்கி இந்திய அணியைக் காப்பாற்றுங்கள். சப்பலே திரும்பிப்போ என்று எழுதப்பட்ட அட்டைகளையும் அவர்கள் கையில் பிடித்திருந்தார்கள்.

அந்த இடத்துக்கு கங்குலி ரசிகர்கள் சப்பலின் பெரிய கொடும்பாவியை இழுத்து வந்தார்கள். அதற்கு தீவைத்துக் கொளுத்தினார்கள். கல்லாலும், செருப்பாலும் அடித்தார்கள். கங்குலியின் உருவப்படங்களை கையில் தூக்கிப் பிடித்திருந்தார்கள். அப்போது ஏராளமான பொலிஸார் கூடிநின்று இதை வேடிக்கை பார்த்தனா. (த-19)



கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் சன்பீஸ்ட் ஓபன் ரென்னிஸ் அரையிறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை எலினா லிகோட் சேவாவை 4-6, 6-4, 6-1 என்ற செட்களில் வீழ்த்தி குரோஷிய வீராங்கனை கரோலினா ஸ்பிரம் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

# பாதியில் வெளியேறினார் மரியா சரபோவா

சீன ஓபன் ரென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தின் பாதி ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை ஷரபோவா வெளியேறினார்.

பீஜிங் நகரில் நடைபெற்றுவரும் சீன ஓபன் ரென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் நேற்று முன்தினம் ரஷ்ய வீராங்கனை மரியா சரபோவா, தனது சக நாட்டு வீராங்கனை கிரிலென்கோவுடன் மோதினார். அதில் கிரிலென்கோ 6-4, 2-1 செட் கணக்கில் முன்னிலை வகித்தார். அப்போது சரபோவா தனக்கு காயம் ஏற்ப்ட்டிருப்பதாகவும், தன்னால் தொடர்ந்து விளையாட முடியவில்லை என்றும் அறிவித்து ரசிகர்களுக்கு கைகளை உயர்த்தி அசைத்துவிட்டு வெளியேறினார்.

எனவே கிரிலென்கோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவர் இறுதிப் போடடிக்கு முன்னேறினார். இதுபோல வீனஸ் வில்லியம்சும் கால் இறுதிப் போட்டியல் காயம் காரணமாக விளையாட வில்லை. (த-19)

**விளையாட்டு செய்திகள்**

# இந்தியா– சிம்பாவே டெஸ்ட் தொடரில் டிராவிட், பதான் முன்னிலையில்




சிம்பாவேக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பந்துவீச்சில் பதானும், துடுப்பாட்டததில் ராகுல் டிராவிட்டும் முதல் இடத்தைப் பிடிததுள்ளார்கள்.

சிம்பாவேயில் நடைபெற்ற இந்தியா- சிம்பாவே அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் ராகுல் டிராவிட் 175 ஓட்டங்களை எடுத்து இத்தொடரில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, இந்திய வீரர்களான லக்ஷ்மன் 148 ஓட்டங்களையும், காம்பீர் 144 ஓட்டங்களையும், சிம்பாவே வீராகளான பிளிக்நாட் 127 ஓட்டங்களையும் தைபு 124 ஓட்டங்களையும் எடுத்துள் ளார்கள்.




இதேபோன்று பந்துவீச்சில் இந்திய வீரரான இர்பான் பதான் 21 விக்கெற்றுக்களை கைப்பற்றி முன்னிலையில் உள்ளார். மேலும் சகீர்கான் 9 விக்கெற்றுக்களையும், ஸ்டிரீக் 6 விக்கெற்றுக் களையும், ஹர்பஜன் சிங் 6 விக்கெற்றுக் களையும் மாவயர் 6 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினார்கள். (த-19)



பீஜிங்கில் நடைபெற்று வரும் சீன ஓபன் ரென்னிஸ் அரையிறுதியில் போலந்தின் மார்டா டொமகோஸ்காவை 7–5, 6–3 என்ற நேர் செட்களில் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார் ஜெர்மனியின் அன்னலேனா குரோனிபெல்டு.

# எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றமாட்டேன்

## நாடு திரும்பிய கங்குலி பரபரப்பு பேட்டி



கங்குலி நேற்று முன்தினம் தாயகம் திரும்பியதும் பரபரப்பான பேட்டி ஒன்றை அளித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி ஜிம்பாவேயில் சுற்றுப்பயணம் செய்து முத்தரப்புப் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடியது. இதில் டெஸ்ட் தொடரை இந்தியா வென்றது.

இந்நிலையில்,இந்திய அணி ஜிம்பாவேயில் இருந்து நேற்று முன்தினம் வெற்றிக்கோப்பை யுடன் தாயகம் திரும்பியது. இந்திய வீரர்களுடன் வந்த விமானம் நேற்று முன்தினம் காலை 2 மணிக்கு மும்பை வந்து சேர்ந்தவேளை நள்ளிரவிலும் ஏராளமான ரசிகர்கள் திரண்டிருந்து கங்குலிக்கும், அவருடன் வந்த 13 வீரர்களுக்கும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதன்பிறகு கங்குலி தனது சொந்த நகரமான கொல்கத்தாவுக்கு சென்றார். அங்கு அவர் நிருபர்களுக்கு பேட்டி அளிகைகயில் பின்வருமாறு தெரிவித்தார்.

என்னைப்பற்றி பயிற்சியாளர் சப்பல் கிாிக்கெட் சபையிடம் புகாா் கூறி இருக்கிறார். இதற்கு என்னிடம் பதில் தயாராக இருக்கிறது. அதை வாரியத்திடம் நான் விளக்கமாக சொல்வேன். மேலும், டெஸ்ட் அணியில் முகமது கை.்.பை சேர்க்காததை ஒரு குற்றமாக என் மீது சொல்கிறார்கள். ஆனால் கை.்.பிற்கு பதிலாக யுவராஜ் சிங்கை சேர்த்தது எனது தனிப்பட்ட முடிவு அல்ல. பயிற்சியாளர் சப்பல் துணைக்கப்டன் டிராவிட் ஆகியோர் சேர்ந்தே இந்த முடிவை எடுத்தோம்.

சப்பல் இன்னும் என்னைப்பற்றி எது வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டே போகட்டும்.அவரை நான் தடுத்து நிறுத்தப்போவதில்லை என்றார்.

மேலும் சச்சினது கருத்திற்கு பதில் அளிக்கையில்,

ஓய்வு அறையில் எமக்குள் பேசிக் கொள்கிற விடயங்களை வெளியிலே சொல்லக்கூடாது என்று டெண்டுல்கர் கூறி இருக்கிறார். அவரது கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

முதலில் நான் கப்டன் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று சப்பல் என்னிடம் சொன்னார். அதன்பிறகு சமாதானத்திற்கு வந்தார். நமக்குள் இனிமேல் கருத்து வேறுபாடு வேண்டாம் என்று அவரே வலிய வந்து என்னிடம் கூறினார். அதன்பிறகுதான் இப்போது கிரிக்கெட் சபைக்கு என்னைப்பற்றி புகார் கடிதம் அனுப்பியுள்ளார். இப்படி அடிக்கடி தனது நிலையை மாற்றிக்கொள்ளும் சப்பல் ஒரு புரியாத புதிராக உள்ளார்.

இதற்கு மேல் நான் செய்தியாளர்களிடம் இது தொடர்பான விடயங்களை பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. அப்படி பகிர்ந்து கொள்வது எரிகிற தீயில் எண்ணையை ஊற்றுவது போல ஆகிவிடும். பத்து ஆண்டுகளாக இந்திய அணியில் கப்டனாக இருந்துவரும் நான் அதைச் செய்யமாட்டேன். வருகிற 27 ஆம் திகதி கிரிக்கெட் சபை ஆய்வுக்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் என்னை அழைத்து என்ன நடந்தது என்று விசாரித்தால் நான் எல்லா உண்மைகளையும் அங்கு சொல்வேன் என்று கங்குலி தெரிவித்தார். (த-19)


# ஷேன் வோன் கடவுளின் பரிசு என்கிறார் டெண்டுல்கர்



கிரிக்கெட் விளையாட்டுக்கு கடவுள் கொடுத்த மிகப்பெரிய பரிசு ஷேன்வோன் என புகழ்ந்திருக்கிறார் சச்சின் டெண்டுல்கர்.


இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தோல்விக்குப் பிறகு அவுஸ்திரேலிய அணியின் நிலைமை பரிதாப மாகி விட்டது. புகழின் உச்சியில் இருந்த இந்த அணி தற்போது பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. இந்நிலையில், அடுத்த மாதம் நடக்கவிருக்கும் சுப்பர் சீரிஸ் தொடரில் உலக லெவன் அணியிடம் அவுஸ்திரேலியா எளிதில் வீழ்ந்துவிடும் என பலர் கருத்துக் கூறுகின்றனர். இதற்கு மறுப்பு தெரிவித் ள்ளார் சச்சின் டெண்டுல்கள். இதுகுறித்து அவர் அளித்த போட்டியில்,

உலகிலே மிகச்சிறந்த அணி அவுஸ்திரேலியா. கடந்த இருபது ஆண்டு காலமாக அவர்களின விளையாட்டு முறை, மற்ற அணிகளைக் காட்டிலும் வேறுபட்டு இருக்கிறது. துடுப்பாட்டம் பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்து துறைகளிலும் வேகமாக செயல் படுபவர்கள். குறிப்பாக மெக்ராத், வோன் இருவரும் நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகிறார்கள். அசத்தலாக பந்துவசி விக்கெட் குவிக்கும் இவர்களை 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றால் யாருமே நம்பமாட்டார்கள்.



சுழல் மன்னனாக திகழும் ஷேன் வோன், கிரிக்கெட்டுக்கு கடவுள் அளித்துள்ள பரிசு என்றே கூறவேண்டும். எத்தனை வீரர்களால் இவரைப் போல் பந்துவீச முடியும்? ஆனால் வோர்னின் தனிப்பட்ட வாழ்க்கையில் பல பிரச்சினைகள் இருப்பது கவலை அளிக்கிறது. இதை எல்லாம் மீறித்தான் அவர் களத்தில் சாதிக்கிறார். இப்படிப்பட்ட திறமை வாய்ந்த வீரர்களைக் கொண்டுள்ள அவுஸ்திரேலியா சுப்பர் சீரிஸ் தொடரில் உலக லெவன் அணிக்கு கடும் நெருக்கடி கொடுக்கும் என்று சச்சின் கூறினார். (த-19)

# தலைவலி நிவாரணம்



தலைவலியை எடுத்துக்கொண்டால், இக் காலங்களில், எதற்குத்தான் தலைவலி வருவது என்ற வித்தியாசமே இல்லாமல் போய்விட்டது. எடுத்ததற்கெல்லாம் தலைவலி என்பதே நம்முடைய நவீன நாகரிக வாழ்க்கை முறை நமக்களித்த பரிசு. பரபரப்பும் வேகமும் கொண்ட தற்கால வாழ்க்கை முறை தலைவலிக்கான காரணிகளையும் அதன் தளங்களையும் விசாலமாக்கி வைத்துள்ளது.

மன உளைச்சல் தலைவலி, தேர்வுநேர தலைவலி, பரீட்சை முடிவு தலைவலி, பிரயாண தலைவலி, மாதவிடாய் தலைவலி, அஜீரண தலைவலி, சீதோஷ்ண மாற்றங்களால் தலைவலி, முன்பக்க வலி, பின்பக்க வலி, உச்சி வலி என்று இன்னும் அதிகம் உள்ளது. இவை எல்லாவற்றையும் விட மிகுந்த துன்பம் தரக்கூடியது ஒற்றைத் தலைவலி.

தலைவலி என்பது தலையில் உள்ள பிரச்சினைகளால் மட்டும் தோன்றுவது அல்ல. அதாவது மூளையில் கட்டி, மூளையில் இரத்தம் உறைதல், தலையில் அடிபடுதல், கபால நீர், சில கண்- காது நோய்கள் போன்ற ஒரு சிலவற்றைத் தவிர, மற்ற எல்லாத் தலைவலிகளும் உடல் உள்ளுறுப்புகளில் ஏற்பட்டிருக்கும் நோய்கள் மற்றும் பாதிப்புகளின் பிரதிபலிப்பே ஆகும்.

முக்கிய உள்ளுறுப்புகளின் கோளாறுகள் பெரும்பாலும் தலையில் வலியாகவும் மற்றவை கால்வலி, கால்சோர்வு என்றுதான் முதலில் பிரதிபலிக்கும். இதை அலட்சியம் செய்து தலைவலிக்கு மாத்திரம் மருந்து, மாத்திரைகள் எடுததுக்கொள்ளும் போது பிரச்சினைகள் மேலும் தீவிரமாகிறது. பலருக்கு நிரந்தரத் தலைவலியாகவும் மாறிவிடுகிறது.

தலைவலி தோன்றிய உடன் அருகிலிருக்கும மருந்துக் கடைகளுக்குச் சென்று தாமாகவே மருந்து வாங்கிச் சாப்பிடுபவர்கள் அம்மருந்துக்கே அடிமையாகி விடுகிறார்கள். எப்பொழுதும் அம் மருந்தைக் கையிலேயே வைத்திருக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு பின்னர் அதிகமாக எடுத்துக்கொண்ட மருந்துகளின் தீய பக்க விளைவுகளுக்கு ஆள்பட்டு வாழ்வில் ருசி இழந்து விடுகிறார்கள். இவர்கள் உடனடியாக ஒரு மருத்துவரை அணுகித் தங்கள் தலைவலியைத தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும்.

அடுத்து முக்கியமானது பிரசித்தபெற்ற தலைவலிகளுக்கெல் லாம் அரசனான ஒற்றைத் தலைவலி. இது மிகக் கடுமையான வலியையும் துன்பத்தையும் ஏற்படுத்தக்கூடியது. வலியானது தலையின் ஒரு பக்கத்தில் ஆரம்பமாகி வீணை நரம்புகளைச் சுண்டி மீட்டுவது போல தலையின் நரம்புகளைச் சுண்டி கடுமையான வேதனையைக் கொடுக்கும். பலருக்கு வலி கழுத்து வலியாகத் தோளில் இறங்கி கைவரை நீளும். சிலருக்குக் கண்கள் மங்கலாகும். வாந்தி வரும். எந்த வேலையும் செய்ய இயலாது. பலர் உடனே படுக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டு படுத்தும் விடுவார்கள். பெரும்பாலும் இத் தலைவலி குறிப்பிட்ட ஒரேநேரத்தில் தினமும் வரலாம். மொத்தத்தில் ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் அன்றாட வாழ்வில் அதிகப்படியான துன்பததை அனுபவிக்கிறார்கள்.

இயற்கையின அற்புதங்களில் முதலிடம் பெறும் மனிதன், ஜம்பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று (உலோகம்), மரம், ஆகியவற்றின் பிரதிநிதியாக உள்ளான். இவை ஐந்தும் சமநிலையில் இருக்கும்போது நோய்கள் தோன்றாது. சித்த, ஆயுர்வேதத்தின் வாத, பித்த, கபம் போன்றவை சமநிலையில் இருக்கும்போது நோய்கள் தோன்றாது என்பன போன்றதுதான் ஐம்பூதத் தத்துவம்.

அவரவர் வசதிக்கேற்ப, நம்பிக்கைகளுக்கு ஏற்ப எந்த வைத்திய முறையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாலும் கூடுதலாக சிகிச்சை மேற்கொண்டாலும் பக்க விளைவுகளற்ற விரைவான நிரந்தர குணம் அடைவது நிச்சயம் என உறுதிபடக கூறலாம். மருத்துவம் என்பது பாதிப்படைந்த உடலை நல்ல நிலைக்குக் கொண்டுவரும் ஓர் உத்திதான். மீண்டும் உடலில் நோய்கள் அணுகாத வண்ணம் காப்பது அவரவர் கடமையாகும். கண்டதைச் சாப்பிடுவதும் பழைய நோய்க்கு முந்தைய வாழ்க்கை முறையில் நீடிப்பதும், வீண் பிரச்சனைகளைத் தலையில் போட்டுக்கொள்வதும், ஒழுக்கம் தவறி நடப்பதும், உடற்பயிற்சி இன்றி இருப்பதும், பொறாமையும் மீண்டும் நோய்களுக்கு நாமே அழைப்புவிடும் செயல்களாகும். அகவே, நோய் நிவாரணம் பெற்றவுடன் எளிய நல்ல பழக்கங்களை மேற்கொண்டால் நிச்சயமாக ஆரோக்கியமாக மகிழ்ச்சியாக வாழலாம்.

# தினமும் திராட்சை



எல்லா வயதினருக்கும் ஏற்றதாக இருப்பது திராட்சைப் பழம். இதனைத் தினமும் சாப்பிட்டு வந்தால் கொழுப்புச்சத்து கட்டுக்குள் இருக்கும். இரத்த அழுத்தத்தையும் திராட்சைப்பழம் கட்டுக்குள் கொண்டுவரும். காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் உடலில் இருக்கும் விஷத்தன்மை கொண்ட பொருட்களை வெளியேற்றும் சக்தியும் திராட்சைப் பழத்திற்கு உண்டு.

தலைவலி மற்றும் ஒற்றைத்தலைவலியால் அவதிப்படுகிறவர்கள் திராட்சைப் பழச் சாற்றைத் தினமும் பருகி வரவேண்டும். பருகி வந்தால் நாளடைவில் தலைவலி குணமாகிவிடும். திராட்சைப் பழம் சீசனில் அதிகமாகக் கிடைக்கும். அப்போது அதனை அதிகமான அளவில் வாங்கி சாறுபிழிந்து போத்தலில் அடைத்து வைத்துக்கொள்ளுங்கள். இதனைப் பல் முளைக்கும் பருவத்தில் இருக்கும் குழந்தைகளுக்குத் தினமும் கொடுத்து வந்தால் குழந்தைகளுக்கு சாதாரணமாக ஏற்படும் நோய்கள் எதுவும் ஏற்படாது. மலச்சிக்கல் ஏற்படும் குழந்தைகளுக்கும் இரத்தம் குறைவாக இருக்கும் குழந்தைகளுக்கும் திராட்சைப் பழச்சாறு தினமும் கொடுத்து வந்தால் மலச்சிக்கல் சரியாகி வீடும். இரத்தமும் அதிகமாக உருவாகும். கிட்னி தொடர்பான நோய்கள் இப்போது அதிகரித்து வருகின்றன. இந்த நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் திராட்சைப் பழத்திற்கு இருப்பதால் கிட்னி தொடர்பான நோய் இருப்பவர்கள் திராட்சைப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வரவேண்டும்..

தற்போதைய உணவுப் பழக்கவழக்கம் பலரையும் ஜீரணக் கோளாறு கொண்டவர்களாக ஆக்கிவிட்டது. ஜீரணத்தில் ஏற்படும் அனைத்துக் கோளாறுகளையும் தீர்க்கும் சக்தி திராட்சைப் பழத்திற்கு இருக்கிறது. அதனால் ஜீரணக் கோளாறு கொண்டவர்கள் தினமும் திராட்சைப் பழம் சாப்பிட்டு வரவேண்டும்.

குழந்தைகளுக்கு திராட்சைப் பழத்தை அப்படியே கொடுக்க முடியாது. அவர்களுக்கு சுடுநீரில் உலர்ந்த திராட்சைப் பழத்தைப் போட்டு பிழிந்தெடுத்த நீரைக்கொடுக்க வேண்டும்.

இதயத்தைப் பலப்படுத்தும் சக்தி திராட்சைப் பழத்திற்கு அதிகம். திராட்சைப் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் இதய வலியைக் கட்டுப்படுத்த முடியும். இதயத் துடிப்பை சீர்படுத்திவிடவும் முடியும்.

கறுப்பு, சிவப்பு, பச்சை நிறங்களில் திராட்சைப்பழம் உண்டு. இவைகளில் சிவப்பு திராட்சையிலே அதிகமான அளவு சத்து இருக்கிறது. உடலுக்குத் தேவையில் லாத வைரஸ் பக்டீரியாக்களை அழிக்கும் சக்தி திராட்சைச் சாறுக்கு இருக்கிறது. திராட்சை சாறு தினமும் பருகி வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 70

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



நகைச்சுவை நடிப்பின் மூலம் முன்னணியில் திகழும் இவர் பல பாடல்களும் பாடியிருக்கிறார். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 70**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 70**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..............................


அனுப்புபவரின் முகவரி :-..............................

..............................

..............................

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 68**
**சரியான விடை**





நடிகர் சாம்

இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 68இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- K.சுஜந்தா
கே.கே.எஸ் வீதி,
நச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு** :- மா.வித்யாதரன்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

**மூன்றாம் பரிசு** :- யோ.ஜெகதீஸ்வரி
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

## சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

லோ.அபிராமி, வல்வெட்டி. P.S.ராணி, வட்டுக்கோட்டை. து.நக்கீரன், மல்லாகம். வி.இளங்கோ, கோப்பாய். பி.பவானி, கொக்குவில். த.பிரதீபன், வடமராட்சி. N.நிகா, உடுவில். L.கீர்த்திகா, உடுப்பிட்டி. ம.ஜனா, இணுவில. இ.அருந்ததி, யாழ்ப்பாணம். இ.ராஜன், வல்வெட்டி. ச.திவ்வியசசி, சித்தன்கேணி. வ.சுதர்ஸன், நாவலர்வீதி. T.நிஷாந்தினி, அராலி. அ.அனித்தா, சித்தன்கேணி. N.நட்சத்திரா, நல்லூர். வி.நந்துஜா, கொக்குவில். சி.சுமன், அல்வாய். செ.மர்லின்மேனகா, கோப்பாய். வே.குமாரசுவாமி, கரவெட்டி. சு.பிரகாஷ், யாழ்ப்பாணம். கே.அரசேஸ்வரன், நல்லூர்.

# உயர்ந்த பெண்மணி



உலகில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களில் மிகவும் உயரமானவர் சாண்டி ஆலன் என்ற அமெரிக்கப் பெண்மணி ஆவார். இவரது உயரம் 2. 35 மீற்றர்கள். அதாவது 7 அடி 7 அங்குலம்.

49 வயதாகும் இவர் அமெரிக்காவின் செல்பிவில்லி நகரைச் சேர்ந்தவர். 1976ஆம் ஆண்டு முதல் சாண்டி ஆலன் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்து வருகிறார்.

# மட்டு.இல் புலிகளைச் சந்திக்கவில்லை ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. மறுப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை தான் சந்திக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமரபுர மகாநாயக்கர், நாகதீப விகாரையின் தலைமைப் பீடாதிபதி ஆகியோருடன் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த ஜயலத் ஜயவர்த்தன, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்ததாகக் கூறப்பட்டது.

ஜயலத் ஜயவர்த்தனவின் மட்டக்களப்பு பயணத்தின்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் குற்றம் சாட்டியிருந்தார்.

டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இது குறித்து விளக்கமளிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நான் இரகசியமான சந்திப்புகள் எதையும் நடாத்தவில்லை. முன்னைய பயணங்களில் அவர்களைச் சந்தித்தது உண்மை தான். தற்போதைய மட்டக்களப்பு பயணத்தின் போது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களையும், மதத் தலைவர்களையுமே நான் சந்தித்தேன்.

எமது சந்திப்புக்கள் குறித்து மட்டக்களப்பு படைத்தரப்பு தலைமையகம் அனைத்தையும் அறிந்தே இருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் நாம் செல்லவே இல்லை. நாகதீப விகாரையின் பீடாதிபதியும் கத்தோலிக்க ஆயரும் மட்டுமே விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான கரடியனாறு பிரதேசத்துக்குச் சென்றனர் எனக் கூறினார். (ற)

## சைவநெறித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலனசபை வழமையாக நடத்தும் சைவநெறித் தேர்வு (தரம் 2- 13 வரை) எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம திகதி நடைபெறவுள்ளது.

இவ்வருடம் இப்பரீட்சையில் 89, 720 மாணவர்கள் தோற்றவுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 502 தேர்வு நிலையங்களில் இத்தேர்வு நடைபெறும்.

தரம் 12 இற்கான இந்துசமயம், இந்து நாகரிகம் ஆகிய இரண்டு பாடங்களிலும் தேர்வு நடைபெறும் என்ற தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ற)

# தேர்தல் விஞ்ஞாபனத்தின் பின்னரே முஸ்லிம் காங்கிரஸின் முடிவு தெரியும்

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டதன் பின்னர் தாங்கள் இறுதியான தீர்மானமொன்றினை எடுக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கட்சியின் அதிஉயர்பீடக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது

இது தொடர்பில் கட்சியின் செயலர் எம்.ரி. ஹஸன் அலி கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று வாரங்களாக நாங்கள் இரு பிரதான வேட்பாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினோம். இதில் முஸ்லிம் சமூகம் கேட்கின்ற எல்லாவற்றையுமே தருவதற்கு தயாராகவிருப்பதாகத் தெரிகின்றது.

ஆனால் அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவரும் வரையில் நாங்கள் எதுவித தீர்மானங்களை எடுக்கமுடியாத நிலையில் உள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையில் முஸ்லிம் சமூகம் ஒரு சமபங்கான ஒருபங்களிப்பினை பேச்சுவார்த்தையில் பங்குபற்றக்கூடிய சந்தர்ப்பத்தை தரவேணடும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றார். (ச-4)

# எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவு வழங்குவதில்லை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த அமைச்சர்களுக்கும் தாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை வர்த்தக சங்கத்தின் பொதுச்செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆரம்பத்திலிருந்தே நிறைவேற்று ஜனாதிபதி பதவி குறித்து எமது எதிர்ப்பை தெரிவித்து வந்திருக்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தலின் முக்கிய வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இரத்துச்செய்வது குறித்து எதுவும் பேசவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ தொழிலாளர் வர்க்கத்திற்கெதிரான நடவடிக்கைகள் எதனையும் குறிப்பிடத்தக்க வகையில் எடுககாத போதிலும் ஜே.வி.பியுடன் செய்து கொண்ட தற்போதைய உடன்படிக்கையின்படி ஜே.வி.பியினரின் கொள்கையை அவர் கொண்டிருப்பதாக கணிக்கவேண்டியுள்ளது.

இதனடிப்படையில் எமது சங்கம் ஒருவரையும் ஆதரிக்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டார். (த-9)

# ஸ்ரீ.சு.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் தயார்! ஜனாதிபதியின் பரிசீலனைக்காக காத்திருப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம தயாரிக்கப்பட்டுவிட்டதாக கட்சியின் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட பின்னரே தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும். இருந்தும் தேர்தல் விஞ்ஞாபனத்தை விசேட குழுவொன்றே தயாரித்து முடித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாடு திரும்பியதும் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் அரிடம் கையளிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும்

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர் மஹிநத ராஜபக்ஷவுடன் செய்து கொள்ளபபட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கேட்டுக்கொண்டுள்ளது. அதுவும் தற்போது பரிசீலனையில் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# மறுபரிசீலனைக்குட்படுத்தப்பட்டுள்ள ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுவிட்டதாக கட்சியின் பிரதிப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றது.

தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும் முன்னர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டன.

குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தொழிலாளர்கள், அரசாங்க உத்தியோகததர்கள் ஆகியோர் நன்மையடையும் விததத்தில் ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார். (ற-4)

# தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் 28 ஆம் திகதி வரை மட்டுமே ஏற்கப்படும்

ஜனாதிபதித் தேர்தலையொட்டி தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படுமென தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

தறபோது தபால் மூலம் வாககளிப்பதறகான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

எனவே, தபால்மூலம் வாக்களிக்கவுளளவர்கள் தங்களது விண்ணப்பங்களைத் தாமதமின்றி தேர்தல் அத்தாட்சி அலுவலர்களிடம் சமர்ப்பிக்குமாறு தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (ற-4)

# மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக போராட ஒத்துழைக்குக!

## புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

அழிவுகள் பலவற்றைக் கொண்டு வரப்போகின்ற மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் மக்கள் இயக்கத்தை முறியடிப்பதற்கு அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்த ஆரம்பித்து விட்டது என்று அதன் புதிய ஜனநாயக் கட்சி தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையிலேயே சட்டரீதியாக அச்சிட்டு மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் வெளியிட்ட மாநாட்டுச் சுவரொட்டிகளை ஒட்டிய அவ இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களை பொலிஸார் கைதுசெய்து அவர்கள் சென்ற வாகனத்தையும் தடுத்து நிறுத்தி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸாரின் இச்செயலையும் அரசாங்கத்தின் மறைமுக தூண்டுதலையும் புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. பொலிஸாரின் இவ் ஜனநாயக விரோத நடவடிக்கை மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தை மிரட்டி கைவிடச்செய்யும் ஒரு முயற்சியாகவே எமது கட்சி கருதுகின்றது.

எனவே சகல தடைகளையும் தாண்டி மேல் கொத்மலைத் திட்ட எதிர்ப்பு இயக்கம் வெற்றிபெற சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சாவகச்சேரி நகரசபையினால் பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரால் பொது மக்களுக்கான குடிநீர் விநியோகத்திற்கென நிறுவப்பட்டுள்ள குழாய்களை சிலா சேதப்படுத்துகின்றனர். திரும்பத் திரும்ப அவற்றைத் திருத்துவது இயலாத காரியம. எனவே சேதப்படுத்தும் பகுதி மக்களே அதற்கு பொறுப்பென்று சாவகச்சேரி நகர சபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்தார்.

அண்மையில் தென்மராட்சி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 கிராம சேவையாளர்களையும் தமது அலுவலகத்தில் வைத்து சந்தித்து மேற்படி தெரிவித்ததுடன் அங்கு மேற்கொள்ளப்படவுள்ள பல திட்டங்களுககு கிராம சேவையாளர்களது ஒத்துழைப்பையும் கோரினார்.

குடிநீர் காலை 6 - 7 மணி, மாலை 4-5 மணி என்ற நேர ஒதுக்கீட்டில் குழாய் மூலம் விநியோகிக்கப்படும். வீதியில் போடப்படும் மின்விளக்குகளை சில விஷமிகள் சேதமாக்கி வருகின்றனர். சங்கத்தானை, அரசடி ஆகிய பகுதிகளில் இச்செயற்பாடு அதிகம் இடம்பெறுகிறது.

திண்மக் கழிவுகளை வீதியில் குவிக்காமல் தமது வளவுகளுக்குள்ளேயே புதைககவோ, எரிக்கவோ வேண்டும். குப்பைகளை சேகரித்து கொட்டுவதில் சபை பாரிய பிரச்சினையை எதிர்நோக்கி வருகிறது. வீதியில் போடப்படும் குப்பைகளை அகற்றமுடியாமல் உள்ளதால் குப்பைகளை சங்கத்தானை முதல் தபால்கந்தோர் சந்திவரை வைக்கப்படும் வாளிகளில் போடும்படியும், பணம் அறவிட்டு அவற்றை அகற்ற ஆலோசிககப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

முக்கியமாக கட்டாக்காலி நாய்களது தொல்லைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதனைத்தவிர்க்க வீடுகளில் வளர்ககப்படும் நாய்களது எண்ணிக்கையைப் பெற்றுத் தருமாறும், நாய்களின் வயது எணணிக்கை என்பவற்றிற்கேற்ப கழுத்துப்பட்டியும் தகடும் விநியோகிக்கப்படுமென்றும் தெரிவித்தா. அவை இல்லாத நாய்கள் சுகாதாரப பகுதியினாரால் பிடித்து அழிக்கபபடும். இதற்கு மக்களது ஒத்துழைப்பு அவசியம் எனறும் மேலும் தெரிவித்தார். (த-29)

# இலங்கைக்கு கடன் வழங்க ஜேர்மனி, பிரான்ஸ் முன்வருகை

ஜேர்மனியும் பிரான்சும் இலங்கைக்கு மேலும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. இந்த நாடுகள் இலங்கைக்கு 8 கோடி 40 இலட்சம் யூரோ நாணயத்தை கடனாக தந்து உதவவுள்ளன.

இந்தத் தொகையில் 6 கோடி 30 இலட்சம் யூரோ நாணயம் சுனாமியால் பாதிக்கபபட்ட அடிப்படைக் கட்டமைப்புக்களை விருத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

பிரான்ஸ் அரசாங்கம் சலுகை வட்டி அடிபபடையில் வழங்கும் கடன் தொகையை 40 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தலாம்.

இதேவேளை, சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியம் கரையோரப் பகுதிகளில சுனாமி புனர்நிர்மாணத் திட்டங்களை அமுல்செய்வதற்கென 1 கோடி 40 இலட்சம் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-7)

## சீரடி பாபாவின் பிறந்ததினம்

(கற்கோவளம்)

பருத்தித்துறை சாயி மந்திரில் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணிக்கு சீரடி பாபா பிறந்தநாள் நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் பஜனை, சொற்பொழிவு போன்றனவும் இடம்பெறவுள்ளது. (த-184)

# இன்று ஒரு தகவல்

## மனித வாழ்க்கை

இன்று நம் நாட்டிலுள்ள யாரைக் கேட்டாலும் மனித வாழ்க்கை ஏதோ ஒரு வகையில் போராட்டமானதே என்றுதான் சொல்வார்கள். ஏன் இப்படிப் போராட்டமானது? என்று ஆராய்ந்து பார்த்தால் நம்மிடையே படித்தவர்கள், படியாதவர்கள் என வெவ்வேறு இன,மத,மொழியுடையவர்கள் காணப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம்.

படித்தவர்களிலும் கூட பல ரகத்தினர் உண்டு. பலர் மனித வாழ்க்கையை ஆரோக்கியமாக்கும் ஆன்மீக வழிகளையோ அறநெறிகளையோ நன்கு கற்றறிந்ததில்லை. தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கான கல்வியைக் கற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். இக் கல்வி முறையும் மனித வாழ்வில் பற்பல உருவங்களில் பங்கம் விளைவிப்பதாகவே கருதப்படுகிறது.

மனித வாழ்வியல் இப்படித்தான் வாழ வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இதை மீறினால் பலர் பாதிக்கப்பட்டு பரிதவிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந் நிலையைப் போக்கி இன்றைய மாணவர் சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் நோக்கில் ஒரு கல்லூரியில் 'மனித வாழ்க்கை' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியொன்று நடைபெற்றது. இதில் பல மாணவர்கள் கலந்துகொண்டார்கள். அவர்களுள் மூவருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டது.

அம் மூவரும் கூறிய கருத்துக்களை இங்கு சுருக்கமாக உங்களுடன் பகிர்ந்துகொள்ளுகிறேன்.

முதலாவது பரிசினைப் பெற்ற மாணவன் 'நாம் இது காலம் வரை பல கதைகளை, கட்டுரைகளைப் படித்திருக்கிறோம். பெரும்பான்மையானவற்றில் உண்மையைப் பேசு... களவு எடுக்காதே... பிறருக்குத் துன்பம் செய்யாதே... போன்ற அறிவுரைகள் பல பொதிந்திருக்கின்றன. இவ்வறிவுரைகளின் படி வழி தவறாமல் வாழ்பவர்கள் மிகக் குறைந்த தொகையினரேயாகும். ஏனையோர் எப்படியும் வாழலாம் என்ற மாதிரித்தான். இந்நிலையே மனித வாழ்க்கையை போர்க்களமாக்குகிறது" என்றான்.

இரண்டாவது பரிசுக்குரிய மாணவன் "எல்லா மனிதர்களும் அன்பு,கருணை உள்ளவர்களாக இருக்க வேண்டும் அப்போது தான் மனித வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும். எம்மிற் பலர் இப்படியா நடக்கிறார்கள்? சுயநலப் போக்கும், போட்டி பொறாமையும், அதிகாரத்தால் பிறரை அடிபணிய வைக்கும் நோக்கும், பெண்ணினத்தை அவமதிக்கும் ஆணவக் கூத்துகளுமே செய்து கொண்டிருக்கிறார்கள். இவைகளில் ஒன்றே போதும் நம் வாழ்வு அமைதியிழந்து போவதற்கு" என்றான் அம் மாணவன்.

அடுத்ததாக மூன்றாவது பரிசுக்குரிய மாணவன் சொன்ன கருத்துக்களைக் கேட்டுப் பாருங்கள் "இன்றைய மனித வாழ்க்கை பஞ்சமா பாதகங்களை நோக்கி பயமும் பதட்டமும் நிறைந்ததாகவே நகர்கிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு என்ன செய்யலாம்? இதுவொரு தொடர் கதையாகாமல் இன்றைய மாணவர்கள்தான் இச் சமுதாயத்தை சீர்திருத்துவதற்கு வழிவகுக்க வேண்டும்" என்றான்.

இம் மாணவர்கள் கூறியது யாவும் உண்மைதான் என்றும் சிரித்து வாழ வேண்டிய வாழ்க்கை இன்று சிக்கலாகி சிந்திக்க வேண்டிய நிலையிலுள்ளது.

இந்நிலையைப் போக்கி ஒவ்வொரு மனிதனும் ஒற்றுமையாக இன்புற்று வாழ வேண்டுமாயின் யாவரும் இறைவனடித்து அன்புடையவர்களாக மாறவேண்டும். இறையன்புடையவர்களுக்கு இனப் பிரச்சினையோ, நான் பெரிது நீ சிறிது என்ற பாகுபாடோ இருப்பதில்லை. இத்துடன் எவ்வகையான துன்பங்களும் கூட அணுகுவதில்லை. இதனால் நாம் எல்லோரும் இறையருள் உள்ளவர்களாகி சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வோம்.

**எழுதுமட்டுவாளூர்**
**எஸ்.எஸ்.காசிப்பிள்ளை**

## தாதியர் சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப தீர்மானம்

(கொழும்பு)

2007ஆம் ஆண்டு முடிவடையும்போது தாதியர் சேவையின் அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்படுமென்று பிரதியமைச்சர் ஜெயரத்தின ஹேரத் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான தாதியர் சேவைக்கு தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்றும் அவர் தெரிவித்தார். குருநாகலில் அண்மையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தாதியர் சேவையில் வெற்றிடங்கள் நிலவுகின்றது. அதேபோன்று க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை தாதியர் சேவையில் இணைக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இன்னும் இரண்டு வருட காலத்திற்குள் தாதியர் சேவையிலிருக்கும் வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படும் என்றும் தெரிவித்தார். (த-9)

# பார்வையாளராக நிற்காமல் முழுப் பங்காளிகளாக செயற்படுவதே இன்றைய காலத்தின் தேவை

## பொங்கு தமிழில் அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழரின் நீதியான உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு சர்வதேசத்திற்கு வலுவான கோரிக்கையை முன்வைக்க பொங்குதமிழ் நிகழ்வில் அனைவரையும் ஒன்றிணையுமாறு யாழ்.மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ஆகியன அழைப்பு விடுத்துள்ளன.

இதுவிடயம் தொடர்பில் அவை விடுத்துள்ள அறிக்கைகளின் விபரம் வருமாறு,

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

அடக்குமுறை,அடாவடித்தனம், தமிழர் தாயகத்தில ஆயுதப்படைகள், உயர் பாதுகாப்பு வலயம், அகதி வாழ்க்கை,இனவிரோத சக்திகள் ஒன்றிணைவு, துணைப் படைகளின் அராஜகம், தமிழன் என்பதால் அடையாளப்படுத்த பதிவுகள் இவைதான் இன்றைய தமிழ் இனத்தினதும், தமிழர் தாயகத்தினதும் யதார்த்த நிலையாகும்.

எமக்கு இருக்கவேண்டிய சுயநிர்ணய உரிமையும் எம்மை நாமே ஆளுகின்ற நிலையும் இருக்குமானால மேலே குறிப்பிட்ட விடயங்கள் எமது பிரதேசத்தில் இருக்குமா? இதற்கு நாம் என்ன செய்யலாம்? எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் நிகழ்வில் தமிழ் இனத்தின் இன்றைய நிலையை சர்வதேசத்திற்கும் அம்பலப்படுத்த சகலரும் ஒன்றிணைந்து ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கேள்விக்குறியாகியுள்ளது. சுனாமி ஆழிப்பேரலை புனருத்தாரணத்தில் வட-கிழக்கு புறக்கணிக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் கொடுக்கவிடாமல் இன விரோத சக்திகள் இணைந்துள்ளன.

இவ்வேளையில் தமிழ் இனம் சுயநிர்ணய உரிமை பெற்று தமது தாயக மண்ணில் நிம்மதியாக வாழ கடநத இரண்டு தசாப்தங்களாக விலைமதிக்க முடியாத பல தியாகங்களைச் செய்துவரும் தமிழினத்தின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களை இறுகப் பற்றி அவர்களோடு கலந்துகொண்டு உறுதியானதும், இறுதியானதுமான முடிவினை மேற்கொள்ள வலுசேர்க்குமாறு வினயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

### சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ் மக்களின் தார்மீக உரிமையை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பொங்குதமிழ் நிகழ்வு முதன் முதலாக இடம்பெற்றமை தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தின் ஓர் திருப்புமுனையாகும்.

ஈழத் தமிழ மக்களின் அபிலாஷை, சுயநிர்ணய உரிமையுடன தன்னாட்சி அதிகாரத்தோடு வாழ்வதேயாகும் என்கின்ற செய்தியை உலகறியச் செய்தமை இப் பொங்கு தமிழ் நிகழ்வாகும்.

கடந்தகால யுத்தம், அதன் விளைவுகள் தமிழ் மக்களையும, தமிழ்ப் பிரஜைகளையும் பெரிதும் பாதிப்படையச் செய்ததோடு தமிழரின் தார்மீக உரிமைகளும் பேரினவாதிகளால் மறுக்கப்பட்டு வந்தன. யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், அதனைத் தொடர்ந்து பல நாடுகளில் பல சுற்றுப் பேச்சுக்கள் கூட சமாதானச் சூழலை உருவாக்க தவறிவிட்டன.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த அழிவிலிருந்து மீட்சிபெற உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பினை செயற்படுதத முடியாத நிலை இப்பொழுது தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்ட விடுதலையும் சமாதானத்துக்கான நம்பிக்கையும் அருகி வருகிறது. இதனை எதிர்கொள்ளும் தமிழ் மக்கள் தமது ஏகோபித்த நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தும் நோக்கில் பொங்கு தமிழ நிகழ்வு இடம்பெறுவது காலத்தின் முக்கிய தேவையாகும்.

தமிழ் மக்களுடைய சமாதான அபிலாஷைகளையும சுயநிர்ணய உரிமையையும், தன்னாட்சி அதிகாரத் தோடு வாழும் உரிமையையும் பெற்றுத் தருக என்பதே இப் பொங்கு தமிழ் நிகழ்வு விடுக்கும் வேண்டுகோளாகும்.

எனவே, மக்கள் அனைவரும் தமது உள்ளத்து உணர்வுகளையும் எமது இனத்தின் ஒற்றுமையையும், எமது நியாயமான,நீதியான உரிமைப் போராட்டத்தையும் அங்கீகரிக்கக் கோரி சர்வதேசத்துக்கும் தெரிவிப்பதற்கு எதிர்வரும் 30ஆம் திகதியன்று நடைபெறவுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொங்குதமிழ் நிகழ்வில் கடலலை போல் அணிதிரண்டு வாரீர்! யாழ்.பல்கலைக்கழக மைதானத்துக்கு! தமிழ் மக்களே!

வெறும் பார்வையாளர்களாக நிற்காமல் முழுப் பங்காளிகளாகச் செயற்படுவதே காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இப் பொங்குதமிழ் நிகழ்வின் குறிக்கோள் வெற்றி பெற இறைவனை வேண்டி நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.இவ்வாறு அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியுடன் அடிக்கடி தொடர்புகொள்ள உதவியவர் கதிர்காமர் -ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச சமூகங்களின் ஊடாக பாரிய நெருக்கடியைக் கொடுப்பதற்கு லக்ஷ்மன் கதிர்காமர் செயற்பட்டார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக் கிழமை பாராளு மன்றில் தெரிவித்துள்ளார்.



இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளைக் கட்டுப்படுத்தலாமென அவர் கருதினார் எனவும் ரணில் விககிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

காலஞ்சென்ற வெளி விவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமருக்கான அனுதாபப் பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கதிர்காமரின் இந் நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளச் செய்வதற்கு தடையாகவிருந்தது. வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளின போது கதிர்காமர் என்னுடன் அடிச்கடி தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். எமது ஆட்சியின் போது இந்தியாவுடன்வர்த்தக உடன்படிக்கையை செய்து கொள்வதற்கு கதிர்காமர் வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது.

அரசியல் செயற்பாடுகள் உட்பட கட்டடக்கலை மற்றும் கலைத்துறை ஆகியன தொடர்பாக அக்கறை செலுத்திய கதிர்காமர், இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியுடன்தான் அடிச்கடி தொடர்பு கொள்வதறகும் உதவியதாக ரணில விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ற-4)

## 7ஆவது தேசிய ஜம்போரி 2006 இல் நடைபெறவுள்ளது

7ஆவது தேசிய சாரணர் ஜம்போரி எதிர்வரும் 2006ஆம் ஆண்டு மாசிமாதம் 21ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நுவரெலியாவில் நடைபெறவுள்ளது. இப் பாசறை நிகழ்வில் இலங்கையிலுள்ள அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த சாரணர்களும் பிறநாட்டுச் சாரணர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

13ஆவது அவுஸ்திலேயன் வென்சர் சாரணர் ஜமபோரி எதிர்வரும் ஜனவரி மாதம் 03 ஆம் திகதி முதல 14ஆம் திகதிவரை அவுஸ்திரேலியாவிலுள்ள கட்டறக்ற சாரணர் பூங்காவிலும் ,14ஆவது ஜப்பான் நிப்பொன் சாரணர் ஜம்போரி அடுத்த வருடம் ஆவணி மாதம் 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை ஜப்பானிலுள்ள சுசுநகரிலும் நடைபெறவுள்ளது.

தேநசிய ஜம்போரியில் பங்குகொள்ளும் 12-18 வயதுச் சாரணர்கள் சாரணர் விருதுகளும் சாரணர் தலைவர்களின் ஆணைப்பத்திரத்தையும் பெற்றிருக்க வேண்டுமென இலங்கைச் சாரணர் சங்கம் தெரிவித்துள்ளது. (த-54)

# சமாதான முயற்சி, பொருளாதார அபி.குறித்து வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும்

## தேசிய கிறிஸ்தவப் பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

நிரந்தர சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன குறித்து ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என தேசிய கிறிஸ்தவப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.


எமது நாட்டில் இரு பெரும் முக்கிய விடயங்கள இருக்கின்றன. அவற்றில் ஒன்று பொருளாதாரம்,மற்றையது சமாதான முன்னெடுப்பு எனவே நிர்ந்தரமானதும் சமத்துவமானதுமான சமாதானம், அபிவிருத்தி, வறுமை, ஒழிப்பு ஆகியன தொடர்பாக தமது திட்டங்களையும் பொருளாதரக் கொள்கைகளையும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது பிரசாரங்களின் போது தெளிவாக விளக்க வேண்டும் என்று தேசிய கிறிஸ்தவப் பேரவை வேண்டுகோள்விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் நேர்மையாகவும், அமைதியாகவும்,சுதந்திரமாகவும் நடைபெறவேண்டும். இதை தமது அதிகாரத்திற்குட்பட்ட நடவடிக்கைகள் மூலமாக ஜனாதிபதியும், ஜனாதிபதி வேட்பாளர்களும் உத்தரவாதப்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் தேசிய கிறிஸ்தவப் பேரவை வலியுறுத்தியுள்ளது. (ற-9)

# யாழ்ப்பாணத்தில் அதிநவீன வசதிகளுடன் கூடிய 14 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் விரைவில்

## ஸ்ரீலங்கா ரெலிகொம் வடமாகாண முகாமையாளர் வி.யோகேந்திரனுடன் செவ்வி

தொலைத் தொடர்புத் தகவல் பரிமாற்ற தொழில்நுட்பம் என்பது நாட்டினுடைய அபிவிருத்தியின் அத்திபாரம் என்று கூறலாம். யாழ்ப பாணததைப் பொறுத்தவரையில் தற்போதுள்ள



தற்காலிக அமைதிச் சூழலில் சில அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறலாம். கடந்த காலப் போர் சூழலினால் உலகிலே நிகழ்ந்த பல அபிவிருத்திப் புரட்சிகள்,கண்டுபிடிப்புகள் என்பன எம்மை வந்தடைவதில் தாமதித்துள்ளது.

ஆனால் இன்று இப்புதிய பரிமாணங்களின் செல்வாக்கு எம்மில் மிக வேகமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இதற்குக் காரணங்களாக எம்மவர்களின் இயல்பான திறமை ஆர்வத்துடன் மிதமான வெளிநாட்டு உறவுகளின் தொடர்புகளும் அமைகின்றன.

யாழ்ப்பாணத்திலே தகவல் தொழில்நுட்ப தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தி வரும் நிறுவனங்களில் பிரதானமானதாக விளங்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் இன்றைய அபிவிருத்தி நிலை எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களை எமது வலம்புரி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளும் முகமாக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் வட பிராந்திய முகாமையாளர் திரு.வி.யோகேந்திரன அவர்களை சந்தித்தோம்.

***கேள்வி:- ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின கட்டமைப்புப் பற்றிக் கூறுங்களேன்.***

பதில்:- ஸ்ரீலங்கா ரெலிகொம் தனியார் அரசு இணைந்த நிறுவனமாகும். நிறுவனத்தில் 49 வீதமான பங்குகள் அரசுக்கு சொந்தமானதாகவுள்ளது. வடக்கு கிழக்கைப் பொறுத்த வரை அதன் முகாமையாளராக திரு. கிருபாகரன் அவர்கள் கடமையாற்றுகின்றார். அவருக்கு அடுத்த படியாக வடமாகாணம் மற்றும் கிழக்கு மாகாண முகாமையாளர்கள் கடமையாற்றுகினறனர். வடமாகாண முகாமையாளராக நான் கடமையாற்றுகின்றேன். வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய பிராந்திய நிலையங்கள் உள்ளடங்குகின்றன.

***கேள்வி:- யாழ்ப்பாணத்திலே ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தற்போதைய சேவைகள் பற்றி.***

பதில்:- வடமாகாணத்தில் உள்ள பெரிய பரிவர்த்தனை நிலையம் யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணத்தில் தற்போது 8000 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. மன்னாரில் 1800, வவுனியாவில் 7000, கிளிநொச்சியில் 500 வடமராட்சியில் 2000 என இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இம்மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் புதிய பரிவர்த்தனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை அறிந்ததே.இதன் மூலம் 1000 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றது.

***கேள்வி:- புதிய 1000 இணைப்புகள் விண்ணப்பித்த கால மூப்பு அடிப்படையில் வழங்கப்படுகின்றதா? இதற்காக புதிய விண்ணப்பம் ஏதும் உண்டா?***

பதில்:- புதிய விண்ணப்பங்கள் இதற்குத் தேவையில்லை. விண்ணப்பித்த கால ஒழுங்கிலேயே இப் புதிய இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விணைப்புகளை யாழ்ப்பாணத்தில் சகல இடங்களுக்கும் வழங்கமுடியும். எனினும் எமது வலைப்பின்னலில் போதியளவு லூப் உள்ள இடங்களுக்கே இதனை வழங்கக் கூடியதாக இருக்கும். சில இடங்களில் லூப் போதியளவு இருக்கும்போது அந்த இடங்களில் முன்பு விண்ணப்பித்தவர்கள இல்லாதவிடத்து புதிதாக இவ்வருடம் விண்ணப்பிப்பவர்களுக்கும இணைப்புகள் வழங்குகின்றோம். சில வேளைகளில் லூப் வசதி இல்லாத இடத்தில் ஒருவர் 99ஆம் ஆண்டில் இருந்து இணைப்புககாக காத்திருக்கும் நிலையும் உள்ளது.

***கேள்வி:- லூப் இல்லை என்று கூறப்படுகின்ற இடங்களுக்கு புதிதாக லூப் வசதிகளை ஏற்படுத்துவதற்கான செயற் திட்டங்கள் ஏதும் உள்ளதா?***

பதில்- சரியான தேவைகள பூர்த்தியாகும் வகையில் வலைப்பின்னல்களை ஏற்படுத்தாமையே லூப் பற்றாக்குறைக்கு காரணமாகும். லூப் பற்றாக்

## இன்ரநெற் வேகத்தை அதிகரிக்க புதிய செயல்திட்டம் அமுல்

குறை உள்ள இடங்களில் தேவைக்கேற்ப சிறியளவில் லூப் வசதிகளை ஏற்படுத்தி வந்தாலும் புதிய லூப் வசதிகளை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்குள் ஏற்படுத்தக் கூடிய வகையில் செயற்திட்டங்கள் நடை பெற்று வருகின்றன. உதாரணமாக தற்போது சுன்னாகத்தில் புதிய பரிவர்த்தனை நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்மூலம் கோண்டாவில் வரை இணைப்புகள் பெறமுடியும். இதில் 2000 இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

***கேள்வி:-இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட புதிய 1000 இணைப்புகளுக்கான பரிவர்த்தனை மூலம் பல புதிய வசதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றதாக அறிகின் றோம் இப்புதிய வசதிகள் பற்றி....***

பதில்:-கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருந்த 8000 இணைப்புக்களை போலல்லாது இப் புதிய பரிவர்த்தனை நிலையும் பல வசதிகளைக் கொண்டது. இது முதல் முறையாக பிரான்ஸ் நாட்டு 'அல்கட்டெல்' தொழில்நுட்ப பரிவர்த்தனையாகும். இதன்மூலம் வழங்கப்படும் இணைப்புகள் இலகுவில் செயலிழக்காதவை. புதிய வசதிகள் என்னும் வகையில் அழைப்பவரின் இலக்கத்தினை அறிந்து கொள்ளும் **CLI** வசதிகள்,எழுத்துருவில் செய்தி அனுப்பக்கூடிய **SMS** வசதிகள் மற்றும் மூன்று பேர் வெவ்வேறு இடங்களில் இருந்து தொலைபேசி அழைப்புக்களை பெற்று ஒரே நேரத்தில் உரையாடக்கூடிய **Call conferance** வசதிகள மேலும் வீட்டில் அல்லது அலுவலகத்தில் இல்லாத நேரங்களில் வரும் அழைப்புகளை வேறு தொலைபேசி எண்ணுக்கு மாற்றக் கூடிய **Call diverting** வசதிகள் என்பன இப் புதிய பரிவர்த்தனை நிலையத்தினால் வழங்கப்படுகின்றது.

***கேள்வி:-இப்புதிய வசதிகளுக்காக வாடிக்கையாளர்கள் மேலதிக கட்டணங்கள் ஏதும் செலுத்த வேண்டியிருக்குமா?***

பதில்:- மேலதிக கட்டணங்கள் அல்ல, சேவைக் கட்டணங்களாக சிறிய தொகை செலுத்த வேண்டியிருக்கும். அதாவது **CLI** வசதியைப் பெறுவதற்கு மாதாந்தம் ரூபாய் 50 செலுத்த வேண்டும். இப்புதிய சேவைக்களுக்கான விபரங்கள் இன்னும் இரு வாரங்களுக்குள் பத்திரிகை மூலமாக அறியத் தரப்படும்.


***கேள்வி:- இதுவரை வழங்கப்பட்டிருக்கின்ற 8000. இணைப்பினைப் பெற்றவர்கள் இப்புதிய சேவையைப் பெறமுடியாதா?***

பதில்:- தற்போது வழங்கப்பட்டு வரும் 1000 இணைப்புகளும் புதிதாக வழங்கப்படுகின்றது. பழையவர்களுக்கு மாற்றிக் கொடுக்க முடியாது. எனினும் இவ்வருடம் டிசம்பர் மாத இறுதிக்குள் எமது சகல வாடிக்கையாளர்களும் இப்புதிய பரிவர்த்தனை அமைப்புக்குள் உள்வாங்கப்படுவார்கள். அதுவரை அவர்கள் சற்றுப் பொறுத்திருக்க வேண்டும். இதற்காக அவர்கள் எதுவித மேலதிக கட்டணங்களையும் செலுத்தத்தேவையில்லை.

எனினும் **CLI, SMS** சேவைகளைப் பெற வேண்டுமாயின் அந்த வசதிகளையுடைய மேசைத் தொலைபேசிகளை மாற்ற வேண்டியிருக்கும். அப் புதிய மேசைத் தொலை பேசிகள் சற்று விலை கூடியவவை.அதை நாம் விற்பனை செய்வோம்.

அத்துடன் முதல் முறையாக நாம் நடமாடும் சேவை மூலம் இணைப்புகள் வழங்கியிருக்கின்றோம். இதன்மூலம் 1000 புதிய இணைப்புகளில் 500 இணைப்புகள் மிக விரைவாக வழங்கப்பட்டுவிட்டன. மேலும் இவ்வருடம் நவம்பர் மாதமளவில் இலங்கையிலேயே முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் சீடிஎம்ஏ (**CDMA**) தொழில்நுட்பம் கொண்ட தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

இது இன்னமும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இந்த **CDMA** வசதி கொண்ட தொலைபேசி மூலம் லூப் இல்லாத பகுதகளுக்கும் தீவுப்பகுதிகளுக்கும் தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இருக்கின்றோம்.



புதிதாக அமைக்கப்பட்ட பரிவர்த்தனை நிலைய திறப்புவிழா

***கேள்வி:-CDMA தொழில்நுட்பம் பற்றி சிறிது விளக்குவீர்களா?***

**Cord division multiple access** எனப்படும் தென்பகுதியில் வேறு சில தொலைத் தொடர்பு நிறுவனங்களால் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.இத்தொழில்நுட்பத்திற்கான அனுமதி கடந்த மாதமே ஸ்ரீலங்கா ரெலிகொம் முககு கிடைத்துள்ளது. இதில் மகிழ்ச்சிக்குரிய விடயம் எதுவெனில் ஸ்ரீலங்கா ரெலிகொம் இந்த **CDMA** தொழில்நுட்ப முறையினை முதல் முதலில் வடகிழக்கிலேயே அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு லூப் வசதி தேவையில்லை. மேசை தொலைபேசியுடன் சிறியதொரு "உணர்வு வாங்கி" (**Antena**) இருக்கும். இதனை இடத்திற்கு இடம்கொண்டு செல்ல முடியும். வீட்டில் இருந்து அலுவலகத்திற்கும் எடுத்துச் செல்

**செவ்வி கண்டவர்**
**யதார்த்திகன்**

லலாம். கிட்டத்தட்ட 40 கிலோமீற்றர் பகுதிக்குள் இயங்கக்கூடியது. இதில் பல வசதிகள் இருக்கும். இவ் இணைப்புக்களுக கான உத்தியோகபூர்வ அறிவிப்பு மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது. இதன் மூலம் லூப் இல்லாததால் இணைப்பைப் பெற முடியாது கஷ்டப்படுபவர்களுக்கு உடனடித் தீர்வு கிடைக்கும்.

***கேள்வி:-ஸ்ரீலங்கா ரெலிகொம் வழங் குகின்ற இன்ரநெற் சேவையின் தரம் பற்றிக் கூற முடியுமா?***

பதில்:- ஆம் எனது சாதாரண இணைப்பில் மொடம் மூலம் ஒரு செக்கனிற்கு 56 கிலோ பைற் என்னும் வேகத்திலே இன்ரநெற்களைப் பார்வையிடலாம். எனினும் லீஸ் லைன் இன்ரநெற்களுக்கு வழங்கப்படும். இதனமூலம் ஒரு செக்கனுக்கு 128,256 கிலோ பைற் என்ற வேகத்தில் சேவையைப் பெற முடியும். எனினும் வேகம் கூடக்கூட கட்டணங்கள் இரட்டிப்பாகிச் செல்லும். இன்ரநெற்றினது வேகத்தை மிக விரைவில் மிகப் பெரியளவில் அதிகரிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

***கேள்வி:- மிக விரைவான இன்ரநெற் சேவையின் திட்டங்கள் பற்றி கூற முடியுமா?***

பதில்:- வவுனியாவுக்கும் யாழ்பாணத்திற்கும் இடையில் ஏ-9 பாதை வழியாக கண்ணாடி இழையிலான (**Optical fibers**) வலையமைப்பு ஏற்படுத்தப்படவிருக்கிறது.

இதன்மூலம் தென்னிந்திய சினிமாப் படங்களைக்கூட இன்ரநெற் ஊடாக பெற்று பார்க்கக் கூடிய செயல் வேகம் கிடைக்கும். இந்தத் திட்டத்திற்குரிய ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட்டு விரைவிலே செயல்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. நாட்டு நிலைமைகள், அரசியல் மாற்றங்கள் சுமூகமாக இருக்குமாயின் இச் செயல்திட்டம் இவ்வருட இறுதிக்குளளேயே பூர்த்தியாக்கப்பட்டுவிடும்.

***கேள்வி:-தொலைபேசி இணைப்புக்களுக்காக காத்திருப்பவர்களுக்கும் தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கும் தாங்கள் கூறிக்கொள்வது***

பதில்:- தற்போது யாழ்.நகர் அண்டிய பகுதியில் 7ஆயிரத்திற்கு மேற்பட்டோரும் மற்றும் சாவகச்சேரி,சித்தங்கேணி,சுன்னாகம் போன்ற பகுதிகளில் 7ஆயிரத்திற்கும் மேற பட்டோருமாக சுமார் 14ஆயிரம் பேர் இணைப்புகளுக்காகக் காத்திருக்கின்றார்கள். 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்குள் நாங்கள வரைந்த செயல்திட்டத்தின் மூலம் யாழ்ப பாணத்தில் மொத்தமாக 23 ஆயிரம் இணைப்புகள வழங்கப்பட்டுவிடும்.

எனவே புதிதாக 14 ஆயிரம் இணைப்புகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. இதன் மூலம் மக்களின் தொலை பேசிச் சேவையில பெரும்பகுதி பூர்த்திசெய்யப்படும்.

மேலும் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள் மூலமாக எமது வாடிக்கையாளர்களுக்கு பல புதிய சேவைகளை உலக அரங்கில் நிகழ்கின்ற உடனடி மாற்றங்களுக்கு ஏற்ப செயற்படுத்தவுள்ளோம். உதாரணமாக இன்ரநெற் சேவையில் தகவல பரிமாற்றம் செய்து கொண்டிருக்கும் போதே தொலைபேசியின் ஊடான உரையாடல்கள் மேற்கொள்ளக்கூடியதான **ADSL** என்னும் முறையிலான இணைப்புகளும் அடுத்த பெப்ரவரிக்குள் செயற்படுத்த திட்டமிடப் பட்டு வருகிறது.

எனவே எதிர்காலத்தில் தொலைத் தொடர்பில் உங்கள் பங்காளியான ஸ்ரீலங்கா ரெலிகொம் உங்கள் தேவைக்கு ஏற்ப சேவைகளை வழங்கும் என்பதைக் கூறிக்கொள்வதில் மகிழ்வடைகிறேன. தனது நெருக்கமான பணிக்கு மத்தியிலும் எமக்கென நேரத் தினை ஒதுக்கி தமது சேவைகள் தொடர்பான தெளிவான விளக்கங்களை வலம்புரி வாசகர்களுக்கு வழங்கிய வடமாகாண ஸ்ரீலங்கா ரெலிகொம் முகாமையாளர் திரு.வி. யோகேந்திரன் அவர்களுக்கு வலம்புரி சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

# டெக்சாஸ், லூசியானாவை புரட்டிப்போட்டது 'ரீட்டா' அடுத்தடுத்து அமெரிக்கா எதிர்நோக்கிய துயரம்!

## * உயிரிழப்பு விபரம் இதுவரை வெளியிடப்படவில்லை.
## * 23,000 கோடி டொலர் இழப்பென்கிறது ஆரம்பகட்ட மதிப்பீடு.
## * மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

(வோஷிங்டன்)

கடந்த ஒரு மாதத்தில் இரண்டாவது முறையாக சூறாவளியால் அமெரிக்கா சுக்கு நூறாகிவிட்டது.

வல்லரசு நாடு என்று அழைக்கப்பட்டாலும் இயற்கை சீற்றத்துக்கு முன் அனை வரும் நிர்க்கதியானவர்களே என்பதை இது வெளிப்படுத்தியுள்ளது.


'கத்ரீனா' சூறாவளிக்குப் பின் நேற்று முன்தினம் கரை கடந்த 'ரீட்டா' சூறாவளியால் டெக்சாஸ் மற்றும் லூசியானா மாகாணங்கள் அதிகளவு உயிர் சேதத்தையும், உச்சக்கட்ட பொருளாதார சேதத்தையும் கண்டுள்ளன. இங்கு 23 ஆயிரம் கோடி டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது.


மக்கள் வெளியேறியதால் வெறிச்சோடிக்கிடக்கும் ஹூஸ்டன் நகரம்

இந்தத் துயரங்களில் இருந்து மக்கள் மீள்வதற்கு பல ஆண்டுகள் ஆகலாம் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் கடநத ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி 'கத்ரீனா' சூறாவளி பயங்கர வேகத்துடன் கரையைக் கடந்தது. இதனால் லூசியானா, மிசிசிபி, அலபாமா மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. லூசியானாவில் உள்ள நியூ ஆர்லியன்ஸ் நகரம் ஒட்டுமொத்தமாக துடைக்கப்பட்டு விட்டது. அந்த நகரம் மீண்டும் முழுவீச்சில் செயல்படத் துவங்க பல ஆண்டுகள் பிடிக்கும் என்று அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

வெள்ளக்காடாக காட்சியளிக்கும் நியூ ஆர்லியன்ஸ் நகரம்.



அமெரிக்க அரசுக்கு மீண்டும் ஒரு அபாயம் 'ரீட்டா' சூறாவளியால் கடந்த வாரம் முதல் ஏற்பட்டது. மெக்சிகோ வளைகுடா பகுதியில் மையம் கொண்டிருந்த 'ரீட்டா' சூறாவளி டெக்சாஸ் மாகாணத்தை நோக்கி மெதுவாக நகரத் தொடங்கியது.

ஆரம்பத்தில் 'எச்சரிக்கை -3' என்ற நிலையில் இருந்த 'ரீடடா' சூறாவளி 'எச்சரிக்கை -5' என்ற நிலையை அடைந்தது.

'ரீட்டா' சூறாவளி இந்திய நேரப்படி நேற்று முன்தினம் மதியம் ஒரு மணிக்கு டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள சபினா பாஸ் மற்றும் லூசியானாவில் உள்ள கேமரன் நகரங்களுக்கு இடையே கரையைக் கடந்தது.

ரீட்டாவால் முதலில் பாதிக்கப்பட்டது இந்த இரண்டு நகரங்களும் தான் மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட டெக்சாஸைச் சேர்ந்த ஹூஸ்டன், கல்வெஸ்டன் நகரங்கள் தப்பிவிட்டன. தொடர்ந்து மெக்சிகோ வளைகுடாவை ஒட்டிய அனைத்து கடற்கரை பகுதிகளிலும் பேய் மழை பெய்து வருகிறது. மழைநின்ற பிறகு தான் உயிர் சேதம், பொருளாதாரச் சேதம எவ்வளவு என்பது தெரிய வரும் என்று அமெரிக்க அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


டெக்ஸாஸில் தடுப்பணைகளை உடைத்துக்கொண்டு சீறிவரும் அலைகள்.

'ரீட்டா' சூறாவளி கடந்த பாதையில் இருந்த அனைத்து நகரங்களிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அனைத்து நகரங்களும் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கியுள்ளன. மின் உற்பத்தி நிலையங்கள் நீரில் மூழ்கி வெடித்துச் சிதறின. அந்த நகரங்களில் இருந்த மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டதால் உயிர்ச்சேதம் அதிகமாக இருக்காது என்றே நம்பப்படுகிறது.

'ரீட்டா' சூறாவளியால் கடற்கரைப் பகுதிகளில் 20 அடி உயரத்துக்கு கடல் அலைகள் எழும்பி உட்புகுந்துள்ளன. இதனால் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. கடற்கரை நகரங்களில் கட்டடங்கள் நிறைந்து காணப்பட்ட தெருக்கள் இப்போது நீரில் மூழ்கியுள்ளன.

கடற்கரை நகரங்களின் தெருக்களில் முறிந்துவிழுந்த மரக்கிளைகளும், இடிபாடுகளுமே அதிகம் காணப்படுவதாகத் தெரிய வருகிறது. லூசியானாவில் உள்ள லேக் சார்லஸ் நகரின் தெருக்களில் சுவர் போல் எழும்பி கடல் அலைகள் உட்புகுந்ததால் அங்கிருந்த கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கத்ரீனாவால் பாதிக்கப்பட்ட நியூ ஆர்லியன்ஸ் நகரம் மீண்டும் வெள்ளக் காடாகி விட்டது. மீட் புப்பணிகள் இந்த நக ரத்தில் இடம்பெற்று வருகின்றன. இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதால் கவலை இல்லை என்று மீட்புப்பணியில் ஈடு பட்டிருக்கும் அதிகாரி கள் தெரிவித்தனர்.


'ரீட்டா' சென்ற பாதையை விளக்குகிறார் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர்.

டெக்சாஸ் கடற் பகுதியில் அமைந் திருக்கும் போர்ட் ஆர்தரில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் இரசாயன நிறுவனங்களும் அதிகம். நாட்டின் எரிசக்தி நகரம் என்ற புகழ் இதற்கு உண்டு. ஆனால், 'ரீட்டா' சூறாவளியால் இந்நகரம் இப்போது சீரழிந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

இரண்டாவது முறையாக இயற்கை சீற்றம் நாட்டை உலுக்கியுள்ளதால் எதற்குமே கலங்காத அமெரிக்க நிர்வாகம் மிகவும் கலங்கிப்போய் உள்ளது. அளவுக்கு அதிகமான உயிர்ச் சேதமும், மிக அதிகபட்ச பொருளாதார சேதமும் அதிபர் புஷ்ஸுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# அனுசக்தித் திட்டம் குறித்து ஐ.நா வில் ஈரான் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

ஈரான் தன்னுடைய் அனுசக்தித் திட்டம் தொடர்பாக அறிக்கை ஒன்றை ஐ.நா பாதுகாப்புச் சபை முன்பு தாக்கல் செய்ய வேண்டும் என்று அமெரிக்கா கோரியுள்ளது.

ஈரானின் அனுசக்தித் திட்டங்கள் சர்வதேச அனுசக்தி ஏஜென்ஸியின் விதிமுறைகளுக்கு முரணாக இருப்பதால் இந்த அறிக்கையைப் பாதுகாப்புச் சபை முன் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ.நா வுக்கான அமெரிக்கத் தூதர் கிராக் கோரீஸ் ஸ்கல்டி நேற்று முன்தினம் வியன்னாவில் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கையில் தெரிவித்தார்.

இதற்கிடையில், ஈரானின் அனுசக்தி செயல்திட்டங்களை நிறுத்திவைக்கும் மேற்கத்தேய நாடுகளின் முயற்சி தோல்வியடைந்துவிட்டது என்று ஈரான் கூறியுள்ளது. சர்வதேச அனுசக்தி ஏஜென்ஸி கூட்டத்தில் ஈரானுக்கு எதிராக ஓட்டுக்களை சேகரிப்பதில் அமெரிக்கா தோல்வியடைந்துவிட்டது என்றும் ஈரான் தெரிவித்துள்ளது. (ற)

# காஸா முனையில் இஸ்ரேல் ஹெலித்தாக்குதல்

(காஸா)

பலஸ்தீனியர்களின் கட்டுப்பாட்டில் உள்ள காஸா முனைப்பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தினர். பலஸ்தீனிய தீவிரவாதிகள் ராக்கெட் தாக்குதல் நடத்தியதில் ஐந்து இஸ்ரேல் வீரர்கள் காயமடைந்தனர். அதற்குப் பதிலடியாக வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தில் காஸா முனைப்பகுதி 38ஆண்டுகளாக இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருந்தது. இங்கிருந்து கடந்த 12ஆம் திகதி இஸ்ரேல் இராணுவ வீரர்களும், யூதர்களும் வெளியேறினார். இதை பலஸ்தீன மக்கள் வெற்றி விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

காஸா முனைப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பலஸ்தீனியர்கள் ஊர்வலமாக சென்றனர்.

இதில் வெடிகுண்டு வெடித்ததில் 15பேர் இறந்தமை தெரிந்ததே. வெடிகுண் டுச் சம்பவத்துக்கு இஸ்ரேல் தான் காரணம் என்று கூறிய பலஸ்தீன தீவிரவாதிகள், இஸ்ரேல் பகுதிகள் மீது 20 ராக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் ஐந்து இஸ்ரேல் வீரர்கள் காயமடைந்தனர்.

இதனால் கோபமடைந்த இஸ்ரேல் இராணுவம் காஸா முனைப்பகுதியின் வடக்குப் பகுதியில் உள்ள காஸா நகர் மீது நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. ஹெலிகாப்டர்களில் வந்த இராணுவ வீரர்கள் காஸா நகரில் ஆயுதங்கள் தயாரிக்கப்படும் இடங்கள் சிலவற்றின் மீது குண்டுகளை வீசிவிட்டுச் சென்றனர். இதில் பலஸ்தீன தீவிரவாதி ஒருவர் காயம் அடைந்தார். (ற)

சுவிற்சர்லாந்தில் டோவன் பெர்க் நகரில் கடந்த மூன்று நாட்களாக சர்வதேச பலூன் திருவிழா நடைபெற்றது. இதில் நேற்று பறக்கவிடப்பட்ட பலவிதமான பலூன்களைப் படத்தில் காணலாம்.



ஆற்றாரும் ஆற்றி அடுப இடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

# திலீபனின் தியாகத்தை அரசு மதித்திருந்தால்...

இன்று தியாக தீபம் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவுநாள். முன்னர் நடந்த அந்த அகிம்சை நோன்பை நினைக்கும்கால் நெஞ்சம் நெக்குருகும்.

அதனை அறியாதார் இப்படியும் ஒரு "அகிம்சை நோன்பு நடந்ததா?" எனக் கேட்பர்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக நல்லூர் வீதியில் தியாகி திலீபன் உண்ணா நோன்பு இருந்தான். அந்த உத்தமனின் தியாகத்தை - தீர்க்க தரிசனத்தை இந்திய அரசும், இலங்கை ஆட்சியாளர்களும் ஒருகணம் சீர்தூக்கி ஆராய்ந்திருந்தால், உலகின் முதலாவது சமாதான நாடாக இலங்கை விளங்கியிருக்கும்.

தனது மண்ணிற்காக, மக்களின் உரிமைக்காக பன்னிரு தினங்கள் நிராகாரம் மறந்து இருக்கக்கூடிய தியாகம் சாதாரணமானதல்ல.

அத்தகைய தியாகத்திற்குப் பின்னால் இருக்கக்கூடிய மனத்திடம், விடுதலைவேட்கை, இலட்சியம் பற்றி சிந்திக்கத் தவறும்போது அதன் விளைவு பாரதூரமானதாகவே இருக்கும்.

தனக்காகவன்றி பிறருக்காக உண்ணா நோன்பிருக்கும் அதிஉன்னத தியாகத்தை தியாகி திலீபன் செய்தபோது அதற்கு இந்திய அரசு உரிய பதிலைக் கொடுத்திருந்தால், இலங்கையும் தன்னை திருத்திக்கொண்டு தமிழர்களின் உரிமை விடயத்தில் ஓர் நியாயமான முடிபை எடுத்திருக்கும்.

ஆனால் இலங்கையில் அமைதியை நிலைநாட்டுவதற்காக, என்று கூறிக்கொண்டுவந்த அமைதிப்படை உள்ளதையும் கெடுத்துவிட்டது.

சிங்கள ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கும், அடாவடித்தனத்திற்கும் உதவுவதாக அமைதிப்படை நடந்துகொண்டது.

இந்திய அமைதிப்படை நேர்மையாக நடந்திருக்குமாயின் அண்டைய நாட்டுக்குரிய தார்மீகக் கடமையை இந்தியா செய்துமுடித்ததென்ற பெருமையைப் பெற்றிருக்கும்.

ஆனால் நடந்ததோ வேறு, இலங்கைப் படைகளால் ஆற்றொணாத் துன்பத்தை அனுபவித்த தமிழ்மக்களுக்கு அமைதிப்படையும் கேடு விளைவித்தது.

ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்தது. இந்த நாசகாரங்கள் நடந்துமுடிந்தமையால் இந்தியாவிற்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவில் பெரியதொரு விரிசல் ஏற்பட்டுவிட்டது.

இந்தியாவையும், ஈழத்தமிழர்களையும் பகைக்கவைப்பது, அதனூடாக ஈழத்தமிழர்களின் உரிமைவிடயத்தில் இந்தியாவின் வாயை அடக்குவது என்ற திட்டத்தில் அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன வெற்றி கண்டார். அவரின் சூழ்ச்சிக்கு இந்தியாவின் அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தியும் அகப்பட்டார்.

தனது அரசியல் அனுபவத்தின் ஊடாக குறுகிய வெற்றியைக்கொண்ட ஜே.ஆருக்கு ஓர் விடயம் புரியாமல்போனது.

அதாவது, தன் இலட்சியத்துக்காக உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகியைக்கொண்ட ஓர் விடுதலை அமைப்பு நிச்சயமாக தனது இலட்சியத்தை அடைந்தே தீருமென்ற உண்மையே அதுவாகும்.

உண்மையில் தியாகி திலீபனின் அகிம்சைக்கு உரிய மதிப்பை இலங்கை அரசு வழங்கியிருந்தால் நாடு சமாதானத்தில் திளைத்திருந்திருக்கும்.

# பொதுக்கட்டமைப்பு முடக்கத்தினால் பல நன்மைகள் கைநழுவியுள்ளன

## வோஷிங்டனில் ஜனாதிபதி தெரிவிப்பு

(நியூயோர்க்)

சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்புக்கு குறைந்தளவிலான எதிர்ப்பே இருந்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இப் பொதுக்கட்டமைப்புக்குத் தீவிர போக்குடைய கடுங்கோட்பாடுடைய சிலரே எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.



வோஷிங்டனில் நடைபெற்ற சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்பின் ஊடாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத் தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானித்தனர்.

இருந்தும், நீதிமன்றத் தீர்ப்பினால் சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்பு செயலிழந்து முடங்கிக் காணப்படுவது கவலைக்குரியது.

இணக்கப்பாட்டுடன் முன்னேறிச் செல்ல இருந்த ஒரு நல்ல சந்தர்ப்பம் இதனால் கைநழுவிப் போய்விட்டது எனத் தெரிவித்தார். (ற-4)

# தியாகதீபம் திலீபனின் நினைவு தின நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் பதினெட்டாவது நினைவுதின நிகழ்ச்சிகள இன்று காலை 9.00 மணிக்கு வழமைபோல் புளியங்கூடல் முததுமாரி அம்மன் ஆலய சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

தீவக மக்கள் அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுமாறு தீவக தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர்.(ற)

# சுனாமி நிவாரண நிதியில் பாரிய முறைகேடுகள் அம்பலப்படுத்தியது கணக்காய்வுத் திணைக்களம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான சர்வதேச நிதியைப் பயன்படுத்துவதில் அரசாங்கம் பாரிய மோசடிகளில் ஈடுபட்டிருப்பதை கணக்காய்வுத் திணைக்களம் அம்பலப்படுத்தியுள்ளது.

மொத்த சர்வதேச நிவாரண நிதியில் 13.5 சதவீதம் மட்டும் தான் முக்கியத் துறைகளின் மீளமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கணக்காய்வுத் திணைக்களம வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை தாக்குதல் நடந்த டிசம்பர் 26ஆம் திகதி முதல் ஜூன் 30ஆம் திகதி வரையிலான சேத மதிப்பீடு மற்றும் கட்டுமான விவரங்களை உள்ளடக்கிய இடைக்கால அறிக்கையை கணக்காய்வுத் திணைக்களம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதேச நிதி மேலாண்மையில் முறைகேடுகள், ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களை உள்நாட்டுக்குள் அனுப்புவதில் விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கற்ற நடைமுறைகள், கட்டுமானப் பணிகளுக்கான பொருட்கள் திருடப்பட்டுள்ளமை உள்ளிட்டவை அந்த அறிக்கையில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க அமைச்சகங்கள், துறைகள்,மாகாணசபை மற்றும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள், மக்கள் தரப்பினர் ஆகியோரிடமிருந்து இந்தத் தகவல்கள பெறப்பட்டதாக கணககாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நிவாரண நிதியாகக் கிடைத்தது மொத்தம் 1168.8 மில்லியன் அமெரிக்கா டொலராகும். இதில் 158.34 மில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மீன் வளத் துறைக்கு 8.2 சதவீதம் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளுக்கு 12.3 சதவீதமும் வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கு 11.2 சதவீதமும் வாழ்வாதாரங்களுக்கு 24.5 சதவீதமும் சுகாதாரத்துக்கு 13.7 சதவீதமும் கல்விக்கு 12.8 சதவீதமும் என இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 17 ஆம் திகதி உள்நாட்டில் திரட்டப்பட்ட மொத்த நிதி 4,277,999,499 ரூபாவாகும்.1,576,318, 448 ரூபா மட்டும் (37 சதவீதம்) செலவிடப்பட்டுள்ளது.

ஆனால் 71 சதவீதம் வீடுகள் மீளமைப்புக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் வீடு திருத்தங்களுக்காக கொடுக்கப்படடிருககும் நிதியும உரிய தேச மதீப்பீட்டு விவரங்கள் இல்லாமல் அளிக்கப்பட்டிருப்பதால் அரசுக்கு பாரிய செலவு ஏற்பட்டுள்ளது.

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதம் தோறும் வழங்கப்பட்ட ரூ.5 ஆயிரம் திட்டத்திலும் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# தனியார் துறை ஊழியர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படுவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட யோசனை பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்பின் பின்னரே இந்த யோசனை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. தொழில் உறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அமைச்சர் அதாவுட செனவிரத்ன இந்தப் பிரேரணையை பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

தனியார் துறையில் 20 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான வருமானத்தினைப் பெறும் ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கான யோசனை இதில் உள்ளடக்கபபட்டுள்ளதாக அமைச்சர் பாராளுமன்றில் தெரிவித்தார்.

நாட் கூலி பெறும் ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு 40 ரூபா கொடுப்பனவு வழங்கும் யோசனையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் ஆடைத் தொழிற்சாலை, பெருந்தோட்டச் கைத்தொழில்,சுற்றுலாத்துறை ஆகிய நிறுவனங்களையும் சம்பள நிர்ணய உடன்படிக்கை செய்துகொண்ட நிறுவனங்களையும் சேர்ந்த ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என அமைசசர் தெரிவித்தார்.

இக் கொடுப்பனவுகள் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-4)

# சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற இரு வேட்பாளர்களும் தீவிரமுயற்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவை மேலும் பெற்றுக்கொள்ள வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரான அமைச்சர் ரி.என் ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

எனினும் 3 முஸ்லிம் கட்சிகள் தமது ஆதரவை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மையினரின் வாக்குகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான முடிவை மேற்கொளளும் வலிமை கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் வாக்குகளைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தமது ஆதரவு தொடர்பாக இன்னும் முடிவுகளை அறிவிக்கவில்லை.

இந்த நிலையில் அவற்றின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்ளும் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

# இலங்கையில் கொலைகள் நிறுத்தப்படும் வரை சமாதானம் ஏற்பட வாய்ப்பில்லை

(கொழும்பு)

டோக்கியோ சமநிலை நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தையும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பில் விமர்சித்திருக்கின்றன.

எனினும் தொடரும் கொலைகள் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து அந்த நாடுகள் தமது நிலைப்பாடுகளை தெளிவாக முன்னெடுத்து வருவதாகவும் இலங்கை பிரச்சினை தொடர்பான இந்திய விமர்சகர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

கொலைகள் தொடர்வதன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள தொடர்பில் இணைத்தலைமை நாடுகள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

2004 ஆம் ஆண்டு தாம் இலங்கைக்குச் சென்றபோது அங்கு தொடரும் கொலைகள் குறிதது மேற்கத்தேய நாடுகள் அதிருப்தி கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர், தற்சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குறித்த நாடுகள் குற்றம் சுமத்துவதாகத் தெரிவித்துளளார்.

இந்த நிலையில் இலங்கையில் கொலைகள் நிறுத்தப்படும் வரை, மனிதவுரிமைகள் மீறப்படுவது நிறுத்தப்படும் வரை சமாதானம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் இந்திய மற்றும் மேற்கத்தேய நாடுகள் கருதுவதாக நாராயணசாமி தெரிவித்துள்ளார். (த-9)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

இந்த உலகம் தான் வாழ்வின் இலட்சியமா? வேறு ஒன்றும் வேண்டாமா? நாம் இப்போது இருப்பது போல்தான் இருக்க வேண்டுமா? இதற்கு மேலாக இருக்க வேண்டாமா? எந்தத் தடையும் இல்லாமல் சுலபமாக ஓடுகின்ற ஒரு இயந்திரமாக இருக்க வேண்டியவனா மனிதன்?

சுவாமி விவேகானந்தர்

# ஒக்டோபர் 25 ஆம் திகதிமுதல் வாக்காளர் அட்டை விநியோகம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்க இருப்பதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நவம்பர் 9 ஆம் திகதிவரை வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும். சுனாமியினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு அநீதிகள் ஏற்படாதவாறு வாக்காளர் அட்டை விநியோகிக்கும் பொருட்டு தபால்மா அதிபரோடு பேச்சுவார்த்தை நடாத்தி ஆவன செய்யப்படவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்கள் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை அருகில் உள்ள தபால் அலுவலகங்களுக்குச் சென்று தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வாக்காளர் அட்டை விநியோகத்தின் போது விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமென தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. (ச-4)

## வவுனியாவில் எழுச்சி மாநாடு

(வவுனியா)

வவுனியாவில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான தீர்மானம் நேற்று வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டத்தின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி எழுச்சி நிகழ்விற்குப் பெருமளவான மக்களைப் பங்கேற்கச் செய்வதென தீர்மானிக்கப்பட்டது. (ச-4)

## திலீபனின்...

நிறைவுபெறவுள்ளது.

இந்த அடையாள உண்ணாவிரத நிகழ்வில் நினைவுரைகள், கவிதைகள், பட்டிமன்றங்கள், நாடகங்கள் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைத்து அரச, அரசசார்பற்ற, கூட்டுறவு, கல்வி, பொது வர்த்தக நிறுவனங்களையும் தியாகி திலீபனின் நினைவு நாள் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது.

இதேவேளை தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அலுவலகத்தில் இன்று மாலை 4 மணிக்கு திலீபனின் இறுதிநாள் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ச)



சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் வீரச்சாவடைந்த லெப்.கேணல் பிறையாளனின் வித்துடல் நேற்று விதைக்கப்பட்டது. அவரது இல்லத்தில் இருந்த வித்துடல் மக்கள் அஞ்சலிக்காக கைவேலி தமிழ் வித்தியாலத்தில் வைக்கப்பட்டு மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

## மகிந்த ராஜபக்ஷவுக்கு...

ஐ.நா. சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி சந்திரிகா கடந்த 12 ஆம் திகதி அமெரிக்காவுக்குச் சென்றார். ஜனாதிபதி அமெரிக்காவுக்குச் செல்வதற்கு முன்பாக மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து தனது கடும் கண்டனத்தை வெளியிட்டு இருந்ததுடன் காட்டமான கடிதம் ஒன்றினையும் அனுப்பிவைத்திருந்தார். அதற்கு மகிந்தவும் பதில் எதுவும் அளிக்கவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணத்தை அடுத்து மகிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெலஉறுமயவுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டார். தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சில கட்டுப்பாடுகளுக்கு இணங்கியே அவர் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தார்.

இதனையடுத்து ஆத்திரங்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக எந்தவிதமான பிரசாரத்திலும் ஈடுபடுவதில்லையென முடிவு செய்திருந்தார்.

இந்நிலையில் ஐ.தே.கட்சியைத் தோற்கடிக்க மகிந்தவுக்கு ஆதரவாக ஜனாதிபதி பிரசாரம் செய்யவேண்டியதன் அவசியத்தை சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள் வலியுறுத்திவந்தனர்.

இதனையடுத்து நியூயோர்க்கிலுள்ள தனது சகோதரனும் - வெளிவிவகார அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்கவுடன் ஆலோசனை செய்து தனது முடிவை மாற்றிக்கொண்டுள்ளார். (ச-4)

## இணைத்தலைமை...

ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நாடுகளைக் கொண்டு இணைத்தலைமை நாடுகள் உருவாக்கப்பட்டது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் இந்தியாவையும் இந்த இணைத் தலைமை நாடுகளின் பட்டியலில் இணைக்கவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திவந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-4)


மனோகரா




கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இன்னும் சில நாட்களுக்கு
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் நடித்த
கிச்சா வயசு 16
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

புதிய வெளியீடு
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
சாணக்கியா

நிறைஞ்சனாஸ் சங்கானை




கா.நே: 11.30, 02.45, 6.00 (பு.நே)






தண்ணீர் கடல் கடந்து தாய்நாடு வரவில்லை
கண்ணீர் கடலாடு....

காணிக்கை

இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்டின்
முன்னாள் ஆசிரியரும், ஆலோசகரும்,
நிறுவன கீத எழுத்துருக் கவிஞருமான
அமரத்துவ கலாநிதி
செ.காரை சுந்தரம்பிள்ளை
அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகள்.

*நிறுவன கீதம் எக்ஸ்பிரஸ் நீங்கள்தான்*
*எழுதித்தந்தீர்*
*கனிவுறு ஆசான் உங்கள் கைகளுக்கு*
*ஓய்வுநாளோ?*
*பொலிவுறு விழாக்கட்கெல்லாம் வந்தினி*
*யாரைக் கேட்போம்*
*விதி இதா தங்கவீணை மேடையில்*
*உடைந்து போச்சு*

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

The Express Institute
Irupalai, Kopay.

அஞ்சலிக்கும்
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஆளணியினர்.

(C-1705)



# இந்துசமய ஆராய்ச்சியாளர்/ திட்ட அலுவலர்

அகில இலங்கை இந்து மாமன்றப் பணிக்கு ஓர் இந்து சமய ஆராய்ச்சியாளர் / திட்ட அலுவலர் உடனடியாகத் தேவை.

நேர்முகப் பரீட்சைக்கு 071- 2723456 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

பொதுச் செயலாளர்

(C-1703)



எதிர்வரும் 28 ஆம் திகதி முதல்





# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அன்புடையீர்!

பார்த்திப ஆவணி 29ஆம் (14.09.05) புதன்கிழமை சிவபதமடைந்த எனது மகன்

## பிரம்மஸ்ரீ சு.சபாநாதசர்மாவின்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை 27.09.05 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இணுவில் 'ஸ்ரீவித்தியா' இல்லத்தில் நடைபெறும்.

அனைவரும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இங்ஙனம்
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
(பிரதமகுரு துர்க்கை அம்மன் தேவஸ்தானம்,
பிரதமகுரு உசன் கந்தசுவாமி கோயில்,
ஆதீன கர்த்தா ஆஞ்சநேயர் கோவில் மருதனார்மடம்)

ஸ்ரீவித்யா
அங்களப்பாய்
இணுவில் கிழக்கு,
இணுவில்

(9908)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.